உங்களுக்கு ஓர் நற்செய்தி....

## வடவை மாதா குரலொலியை இணையதளத்திலும்....

வாசகர்களே...
தொடர்ந்து... வடவை மாதா குரலொளி பத்திரிகையை இணைய தளத்திலும்

**நீங்கள் காணலாம்.**

உங்கள் கருத்துக்களை தவறாது பதிவு செய்ய மறவாதீர்கள். உங்கள் ஆதரவுக்கு நன்றி!

இணைய தள முகவரி

**www.vadavaimadhakuraloli.com**

– ஆசிரியர்


# வடவை மாதா குரலொலி

**........... 2015 ...........**

ஆசிரியர்

**எம். சேவியர் சந்திரகுமார்**

ஆசிரியர் குழு உறுப்பினர்

**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்**

மற்றும் பலர்

வடிவமைப்பு :

**ஏ.கே.எஸ். கிரியேடிவ்**

(அ. காதர் மொய்தீன்)

அச்சகம் :

**ஜே.எம்.பிராசஸ்,** சென்னை-14.

மாதா கோவில் படங்கள்

**எஸ். பழனியப்பன்** (சுந்தர் ஸ்டுடியோ)

வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்



**எம். சேவியர் சந்திரகுமார்**

1/448, பிள்ளையார் கோவில் தெரு,
கேளம்பாக்கம் – 603 103.
காஞ்சிபுரம் மாவட்டம்.
தொலைபேசி : 98845 38281

மின்னஞ்சல் :

**icdsxavier@gmail.com**




# அற்புத புனிதர்களின்

## வடக்கன்குளம் மக்கள் கொடுத்து வைத்தவர்கள்...

எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.... இது நாம் பொதுவாக அடுத்தவரிடம் வைக்கும் வேண்டுகோள்.

ஒரு மாதம் முழுவதும் நாம் ஒரு ஐம்பது கிறிஸ்தவ நண்பரையோ, உறவினரையோ பார்க்க நேரிடுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். எல்லோரிடமா மேற்படி வேண்டுகோளை வைக்க முடியும்...?

ஒன்றிரண்டு பேரிடம்தான் இந்த வேண்டு கோளை வைக்கிறோம். தகுதியானவரிடமோ, நம்மை நேசிக்கிறவரிடமோ, நாம் மதிக்கிற வரிடமோதான் இவ்வாறு கேட்க முடியும்..!


ஆக, நாம் நமது ஜெபத் தேவைகளை சக மனிதரிடம் கேட்க அவருக்குத் தேவை தகுதி..!

இந்தத் தகுதியும் நிச்சயத்தன்மை கொண்ட தல்ல! நாம் நம்பும் மனிதர், நமக்குத் தெரியாமல் படு போக்கிரியாகக் கூட இருக்க முடியும்.

நாம் கேட்டதும் அவர் ஜெபிப்பாரா என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. அவர் ஜெபித்தாலும் அந்த ஜெபம் கேட்கப்படும் என்பதற்கு என்ன உறுதி உள்ளது? ஆனால், பொதுவாக இப்படியெல்லாம் நாம் யோசிக்கத் தேவையில்லை.!

பொதுவாக நாமே நமக்காக ஜெபிக்கும் ஜெபத்தைவிட, பிறர் நமக்காக ஜெபிப்பது பல மடங்கு பயனுள்ளது என்பது உண்மை. அதனால்தான் ஜெபிக்கவே கேட்கிறோம்.

ஒரு நிச்சயத்தன்மை கொண்டவர் நமக்காக பரிந்து பேசினால், அந்த ஜெபம் நிச்சயம் கேட்கப்படும் ! அந்த தகுதியுடைய நபர்கள் நமக்கு யார்?



புனித ஜார்ஜியார் கோவில்

அவர்கள்தான் புனிதர்கள்!

இந்தப் புனிதர் திருச்சபையால் அங்கீகரிக் கப்பட்டவராயிருந்தால் இவரிடம் "எனக்காக ஜெபியுங்கள்" என்று நம்பகமாக கேட்கலாமே!

"நான் உனக்குப்போதும்" என்று இயேசு சொன்னாரே, அவ்வாறிருக்க ஒருவர் எவ்வளவு தான் புனிதத் தன்மை கொண்டவர் தாம் என்றாலும் அவரை வணங்கலாமா? என்று கூறுகின்றனர்..! பிற சபையினர்.

வணக்கம் என்பது வேறு ; ஆராதனை என்பது வேறு.

இயேசு ஒருவரே ஆராதனைக்குரியவர். வேறு பலரும் வணக்கத்துக்குரியவராக இருப்பதில் என்ன தவறு.?

# ஆலயங்கள்...




பலர் பணிபுரிகின்ற ஒரு அலுவலகம்! புதிதாக நாம் வேலைக்கு சேர்க்கிறோம். சில மாதங்களில் எல்லோரிடமும் பழகி விடுகிறோம். யார் எப்படி என்று தெரிகிறது. வழக்கம்போல அலுவலக வாழ்க்கை தொடர்கிறது...

திடீரென்று ஒருநாள், நம்மிடையேயுள்ள சக ஊழியரை அலுவலக உரிமையாளர் மிகவும் போற்றுகிறார். போற்றுவதற்கு அடையாளமாக அவருக்கு பதவி உயர்வு கொடுக்கிறார். வாகனம் ஒன்றை வழங்குகிறார். இன்னும் பல விஷயங்கள் மூலம் அவர் மட்டும் அப்போதைக்கு அங்கீகரிக்கப்படுகிறார்.

இதைப்பார்த்த நாமும், வழக்கம்போல பாராமுகமாய்ச் செல்லாது, அவரிடம் முன்பை விட ஒரு சிறிதேனும் நட்பாக மரியாதையாக பழகுகிறோம்.

ஆனால், நாம் அவரை வெறுக்க ஆரம்பித்தால், உரிமையாளர் இதைப்பார்த்து நம்மேல் குறை சொல்ல மாட்டாரா? அவர் என்ன பைத்தியக்காரரா? தகுதியில்லாதவருக்கு பதவியை வழங்கிய அவர் நிச்சயம் மோசமானவராகத்தானே இருக்க வேண்டும்.



புனித அந்தோணியார் கோவில்

உங்களது விடை என்ன?

சரி.. விஷயத்திற்கு வருவோம். இப்பொழுது எவ்வாறு உரிமையாளர் ஒருவரை அங்கீகரித்து உயர்த்தினாரோ, அதுபோன்று ஒரு மனிதரை இறைவனே தலையிட்டு அவனுக்கு அற்புத வரத்தையும் ஞான எழுச்சியையும் வாரி வழங்குகிறாரென்றால், அவ்வாறு அவரால் உயர்த்தப்பட்டவரை நாம் உதாசினப்படுத்து வோமா?

அவ்வாறு உதாசினப்படுத்துவதன் மூலம் இறைவனையேயல்லவா, உதாசினப்படுத்து கிறோம். அப்படியென்ன இறைவன் ஒரு தனிப் பட்டவரை, அளவுக்கு மீறி உயர்த்தினார்..?

ஆம்! புனிதர்கள் என்று திருச்சபையால் அழைக்கப்படுபவர்கள் அனைவருமே, இறை வனால் பூவுலகிலேயும், அவர்கள் இறந்த பின்ன ரும் அங்கீகரிக்கப்பட்டவர்கள்தாம்.

உதாரணமாக... எந்த புனிதரைச் சொல்லுவது..?

மொத்தமுள்ள 3000 புனிதர்களுள் யாரைச் சொல்வது..?

இதற்கு ஒரு வித்தியாசமான ஒரு வழிமுறை யைச் சொல்லலாமா..?

வடக்கன்குளத்துக்கு தொடர்புடைய புனிதர்கள் வரலாற்றையே எடுத்துக் கொள்ளலாமா..?

வடக்கன்குளத்தில் சுமார் பத்து விதமான கோயில்கள் உள்ளதல்லவா..?

அதில்,மனிதப்புனிதர்கள் மூவருக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது. அது புனித அந்தோனியார் கோவில், புனித செபஸ்தியார் கோயில், புனித ஜார்ஜியார் கோவில் ஆகியவையாகும்.

ஊரில் தென் கிழக்குக் கோடியில் புனித அந்தோனியார் கோவில்! ஊரின் வடகிழக்குப் பகுதியில் புனித செபஸ்தியார் கோயில்! ஊரின் வடக்குப் பகுதியில் புனித ஜார்ஜியார்! ஊரின் நடுப்பகுதியிலுள்ள வடவை மாதா கோயிலின் வளாகத்தில் முத்திப்பேறு பட்டம் பெற்ற தேவசகாயம் பிள்ளைக்கு மணி மண்டபம்.

இவர்களனைவரும் இவ்வுலகிலிருந்த சாதாரண மனிதர்கள் தாம்! தேவசகாயம் பிள்ளை தவிர, மீதி அனைவரும் வெளிநாட்டுக்காரர்கள்!



ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் தோற்றமளித் தவர். துறவியாகிய அந்தோ னியார்! தனது ஜெப குறிப்புகளைத் தாங்கிய கையெழுத்துப் பிரதியைத் திருடிய திருடனால், குறிப் பிட்ட இடத்தைத் தாண்டி செல்ல இயலாது இறைவன் தடுத்தார். திருடன் மனந்திருந் தினான். பலநாள் பட்டினி போடப்பட்ட கழுதையின் முன்னர் அவித்த கொள் தானியமும், அந்தோனியாரால் உயர்த் திக் காட்டப்பட்ட திவ்ய நற்கருணையான அப்பமும் காட்டப்பட்டது.

**அந்தோனியார் ஜெபிக்க ஆரம்பிக்க மழை பெய்தாலும் யார் மீதும் ஒரு துளியும் நனையவில்லை.**


புனித அந்தோணியார் கோவில்

பசியாற கொள்ளைத் தின்னுமோ கழுதை என்று கழுதையைக் கூட்டி வந்து சவால்விட்ட செல்வந்தன் தலை குனியும் வகையில் கழுதையானது திவ்ய நற் கருணை இருந்த இடம் நோக்கி பணிந்து வணங்கி கொள் தானியத்தை தின்னுவதற்கு மறுத்தது. இது இறைவன் அந்தோனியாரின் விசுவா சத்தைப் பார்த்து நிகழ்த்திய அற்புதம்.

**ஒருநாள் அந்தோனியார் இரவு நேரம் வெகுநேரம் ஜெபிக்கும்பொழுது, இறைமகன் இயேசுவே குழந்தையாக அவரது மடியில் இறங்கி தவழ்ந்தார்.**

ஒருநாள் அந்தோனியாரின் மறையுரை யைக் கேட்க பெருங்கூட்டம் கூடிய நேரத்தில் பலத்த மழை பெய்தது. அந்தோனியார் ஜெபிக்க ஆரம்பிக்க, மழை பெய்தாலும் யார் மீதும் ஒரு துளியும் நனையவில்லை. ஒருநாள் அந்தோனியார் இரவு நேரம் வெகுநேரம் ஜெபிக்கும்பொழுது, இறைமகன் இயேசுவே குழந்தையாக அவரது மடியில் இறங்கி தவழ்ந்தார். அந்தோனியார் தன்னை குழந்தை போன்று பாவித்து முத்தமிட அனுமதித்தார் குழந்தை இயேசு.

ஏழையொருத்தி அவருக்கு தனது வீட்டில் இரவில் வாங்கப்பட்ட கண்ணாடி பாத்திரத்தில் சாப்பாடு பறிமாறும்பொழுது, கை தவறி விழுந்து கண்ணாடிப்பேழை சுக்கு நூறாக உடைந் தது. அந்தப் பேழைத் துகள்களை கையி லெடுத்து ஜெபித் தார் ; கண்ணாடிக் குடுவை, பழைய தோற்றத்தில் ஒட்டிக் கொண்டது.



அப்போதைய போப்பாண்டவர் மற்றும் குருக்கள் மத்தியில் அந்தோனியார்



**அந்தோனியார் கடலை நோக்கி மறைவுரை யாற்றவே ஒட்டுமொத்த அந்தப்பகுதி மீன்களும், தண்ணீரின் மேல் தலையைத் தூக்கிய நிலையில் அவரது பிரசங்கத்தைக் கேட்டன.**

தனது மொழியில் ஆற்றிய மறையுரை அனை வருக்கும் தத்தம் மொழியில் கேட்டதையறிந்த குருக்கள் இறைவனை மகிமைப்படுத்தினர்.

அந்தோனியார் நாவன்மையுடன் நேர்த்தியாக பிரசங்கம் செய்ய வல்லவர் ; ஒருநாள் இவரது பிரசங்கத்தைக் கேட்கும் ஆவலுடன் பெண்ணொருத்தி தனது வீட்டுத் தொட்டிலில் தனது குழந்தையை கிடத்தி தூங்க வைத்துவிட்டு, ஓடோடி வந்து பிரசங்கத்தை கேட்டாள்! திரும்பிச் சென்று பார்த்தால், குழந்தை இறந்து கிடந்ததைப் பார்த்து அழுது துடித்தாள். அந்தோனியாரிடம் முறையிடவே அந்தோனியார் ஜெபத்தில் குழந்தை உயிர் பிழைத்தது. வேறொரு குழந்தை வெந்நீரில் கைவிட்ட போதிலும், வெந்நீர் குழந்தைக்கு சுடவில்லை.

ஒரு ஊரில் பிரிவினை சபைக்காரர்களின் தொல்லை அதிகமிருந்தது. கடற்கரையொன்றில் அவர்களெல்லாம் கூடியிருந்த வேளையில் அந்தோனியார் கடலை நோக்கி மறைவுரை யாற்றவே ஒட்டுமொத்த அந்தப்பகுதி மீன்களும், தண்ணீரின்மேல் தலையைத் தூக்கிய நிலையில் அவரது பிரசங்கத்தைக் கேட்டன. அந்தோனியார் சிலுவையடையாளமிடவே திருப்தியுடன் திரும்பின மீன்கள்..! பார்த்துக் கொண்டிருந்த பிரிந்த சபையினர் மனந் திருந்தினர்.

இவரின் பிரசங்கத்தைக் கேட்டால் கள்வர்கள் திருந்துவர் ; சாமாதான மிழந்தவர் களுக்கு சமாதானம் கிடைத்தது. பிரிந்தவர்கள் சேர்ந்தனர் ; மனக் குறையோடு வந்தவர்கள் நிவர்த்தி பெற்றனர். அநியாய வட்டி வாங்கிய வர்கள் திருந்தினர். நடக்கப்போவதை முன்னறி வித்தவர் அந்தோனியார்.

**மண்ணோடு மண்ணாக ஆகியிருந்த கோலத்தில், நாவன்மைமிக்க அவரது நாக்கு மட்டும் அழியாமல் அப்படியே இருந்தது!**

அந்தோனியார் இறந்த பின்னர் அவர் கல்லறைக்குச் சென்று வேண்டுவோருக்கு பலவிதமான அற்புதங்கள் நடைபெற்றன. அந்தோனியார் இறந்து 32 வருடம் முடிந்தபின் அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டது. உடல் முழுவதும் மண்ணோடு மண்ணாக ஆகியிருந்த கோலத்தில், நாவன்மை மிக்க அவரது நாக்கு மட்டும் அழியாமல் அப்படியே இருந்தது!

***கோடி அற்புதர் என்பது அந்தோனி யாருக்கு பொருந்துமல்லவா..?***




**இ**னி செபஸ்தியார் பற்றி! ஆதித் திருச்சபை நேரத்தில் ரோமாபுரியில் பிறந்தவர் செபஸ்தியார். படைவீரனாக ஆரம்பித்து தளபதியானவர். அவர்



வாழ்ந்த காலத்தில் இயேசுவை கடவுள் இல்லை என்று மறுதலிக்கும்படி அரசனால் ஏராளமானோர் கட்டாயப்படுத்தப் பட்டனர். கீழ்ப்படிய மறுத்த தியாகிகளை உயிரோடு சிரச்சேதம் செய்தான் மன்னன்!

**அங்கு வந்து ஜெபித்தவர்கள் பேய் பயம், நோய் பபம் நீங்கப் பெற்றனர்;. வருத்தும் காலரா, கொடுமையான கொள்ளை நோய், படை நோய், அம்மை நோய், பைத்தியம் அனைத்தும் நீங்கப் பெற்றான்.**



இவ்வாறு பல சம்பவங்களை நேரில் கண்ட செபஸ்தியார் தானும் ஆழ்ந்த விசுவாசத்தால் வளர்ந்தார்.


எதிரி சேனைகளிடம் தனது அரசன் பலமுறை தோற்ற நிலையில், தாம் தளபதியான பின்னர், இவர் வகுக்கும் பாதைபடி சேனைகள் நடக்க, அனைத்து போரிலும் வெற்றியோ வெற்றி!

செபஸ்தியார் செபித்தால் நோய்கள் பறந்தோடின, பிரச்சினைகள் தீர்ந்தன. இதனைக் கேள்விப்பட்ட மன்னன் வெகுண்டெழுந்தான். இயேசுவை மறுதலிக்க நிர்ப்பந்தப்படுத்தினான். செபஸ்தியார் மறுக்கவே அவரைக்கொலை செய்ய ஒப்புவித்தான். அவரை மரத்தில் கட்டி வைத்து ஈட்டிகளால் குத்தி காயப்படுத்தினர்.

மரித்த நிலை வந்ததும் சிப்பாய்கள் உடலை விட்டு விட்டு திரும்பினர். அவ்வழியாக வந்த பெண்கள் அவரது உடலை தூக்கிச் சென்றனர். பராமரித்தனர் ; மீண்டும் சுகம் பெற்றார் செபஸ்தியார். இதனைக் கேள்விப்பட்ட மன்னன், மீண்டும் தடிகொண்டு அடித்துக் கொலை செய்ய பணித்தான் ; இறுதியில் கொன்றே போட்டார்கள்.

அவரைப் புதைத்த கல்லறையில் அற்புதங்கள் நடைபெற்றன. அங்கு வந்து ஜெபித்தவர்கள் பேய் பயம், நோய் பபம் நீங்கப் பெற்றனர்;. வருத்தும் காலரா, கொடுமையான கொள்ளை நோய் படை நோய், அம்மை நோய், பைத்தியம் அனைத்தும் நீங்கப் பெற்றான்.

## *அடுத்தது புனித ஜார்ஜியார்!*



புனித ஜார்ஜியார் கோவில்

கப்பதோசியா என்ற நாட்டில் பிறந்த ஜார்ஜியார், செபஸ்தியார் போன்றே போர் வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்தார் மாறாத விசுவாசங்கொண்ட குணசீலராகத் திகழ்ந்தவர் ஜார்ஜியார்.

**அவரைப் பிடித்து மூன்று நாள் தீச்சூளையில் இட்டு வதைக்கச் செய்தான். தீ அவரை ஒன்றும் செய்யவில்லை!**



சைலான் என்னுமிடத்தில் பறவை நாகமொன்று நாள்தோறும், யாரையாவது பலி கொடுத்தால் மட்டுமே மனிதர்களைவிட்டுவைத்தது, மன்னரது மகள் பலியிடப் படும் நாள் வந்தது. நமது ஜார்ஜியார் அங்கு சென்றார் ; கூட்டத்தின் மத்தியில் இறைவன் இயேசுவிடம் மன்றாடினார் ; பறவை நாகத்தை கொன்று, இளவரசியைக் காப்பற்றினார். அருகில் மசூதி இருந்தது. ஏராளமான இஸ்லாமியர்கள் இதைப் பார்த்து மனந்திரும்பினர்.

இதற்கிடையில் தான் பணியாற்றிய படையின் மன்னன், குடிமக்களை அப்பல்லோ என்ற தெய்வத்தை வணங்கச் சொல்லி, குடிமக்களை நிர்ப்பந்தித்தான்.

**அவ்வாறே, அவரது உடல் எரிக்கப் பட்டு, சாம்பல்தான் மிஞ்சியது. காரியம் முடிந்த திருப்தியுடன் திரும்பிய நான்கு சிப்பாய்கள் கண்ணெதிரே சாம்பவினிடையே எழுந்து நின்றார் ஜார்ஜியார்.**

ஜார்ஜியார் மட்டும் அப்பல்லோ சிலையை வணங்க மறுத்தார். அவர் அந்த சிலை முன்பு வந்து, உண்மையான இறைவன் இயேசு இருக்க நீ யார் என்று கேட்டார். அந்த சிலையில் பதிந்

திருந்த பிசாசு. நான் ஒரு சாத்தான் என்று உரக்கக்கூறி ஒப்புக் கொண்டது. சிலை மீது சிலுவை வரைய, சிலை சுக்கு நூறாக விழுந்து உடைந்து பேய்களெல்லாம் சிதறி ஓடின.



கேள்விப்பட்ட மன்னன், ஒரு மாந்திரி கனிடம் பேய்களை வைத்து ஜார்ஜியாரை கொல்லுவதற்கு ஆணையிட்டான்; வந்த மாந்திரீகனோ, ஜார்ஜியாரின் அருளுரை யைக் கேட்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றான்.

கேள்விப்பட்ட மன்னன், அவரைப் பிடித்து மூன்று நாள் தீச்சூளையில் இட்டு வதைக்கச் செய்தான். தீ அவரை ஒன்றும் செய்யவில்லை! பட்ட மரத்தில் கட்டி வைத்து நையப்புடைத் தான் ; பட்ட மரமோ துளிர்த்தது! பழங்கள் தோன்றி மரம் முழுவதும் நிறைந்தது, பார்த்தவர்கள் மனந்திருந்தினர்.

இத்தனை நடந்த பின்னரும் மனம் மாறாத மன்னன், அவரை மலையுச்சிக்குக் கொண்டு சென்று உயிரோடு எரித்துக்கொல்ல ஆணை யிட்டான். அவ்வாறே, அவரது உடல் எரிக்கப் பட்டு, சாம்பல்தான் மிஞ்சியது. காரியம் முடிந்த திருப்தியுடன் திரும்பிய நான்கு சிப்பாய்கள் கண்ணெதிரேசாம்பலினிடையேஎழுந்துநின்றார்

**உயிரற்ற உடலை ஆழ்குழியில் புதைத் தார்கள். புதைத்த உடலுடன் உயர் பெற்று எழுந்து நின்றார் ஜார்ஜியார்.**

ஜார்ஜியார். அந்த நால்வரும் ஞானஸ்நானம் பெற்றனர்.

இதனையும் கேள்விப்பட்ட மன்னன் அவரை சக்கரத்தினடியில் படுக்க வைத்து அரைத் தான்! உயிரற்ற உடலை ஆழ்குழியில் புதைத் தார்கள். புதைத்த உடலுடன் உயர் பெற்று எழுந்து நின்றார் ஜார்ஜியார்.

மூன்று முறை உயிரோடெழும்பிய ஜார்ஜியார், ஒரு தடவை அதே மன்னனும், பிற மன்னர்களும் கூடியிருந்த சபையில் தோன்றி இறைவன் இயேசுவைப்பற்றி பிரசங்கித்தார். வெகுண்டெழுந்த மன்னர்கள், இம்முறை அவரது தலையை வெட்டிட பணித்தார்கள் ; வேத காட்சியாக மரித்தார்.

பார்த்துக் கொண்டிருந்த பல மன்னர்கள் மனந்திரும்பினர் ; மனம் மாறாத நான்கு மன்னர்கள் மட்டும் விரைவிலேயே செத்தொழிந் தனர். ஜார்ஜியார் கல்லறையில் அற்புதங்கள் நடைபெற ஆரம்பித்தன.

பிறவித்துன்பம், தீராத நோய், குருடு, செவிடு, மலடு, ஊமை அனைத்தும் நீங்கப் பெற்றனர். ஊனமுற்றவர்ஊனம்நீக்கப்பெற்றனர்.

சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் புனித ஜார்ஜியார் ஆலயம் இன்னும் உள்ளது. **அவர் பெயரில்தான் இன்னும் தலைமைச் செயலகம் இயங்குகிறது என்பது அனைவருக்கும் தெரியும்.** ●

தினமலர் 8-8-2015

## ஈராக்கில் 19 பெண்கள் கழுத்தறுத்து கொலை..!

... **ல**ண்டனிலிருந்து வெளியாகும் 'டெய்லி மெயில்' பத்திரிகை, தனது வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. ஐ.எஸ்., அமைப்பு, 'செக்ஸ் ஜிகாத்' என்ற பெயரில் நடத்தும் அட்டூழியங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. 2014 ஜூனில், ஈராக்கின் மொசூல் நகரை பயங்கரவாதிகள் கைப்பற்றினர். அப்போது, 19 பெண்களை கடத்திச் சென்று, பிணைக் கைதிகளாக சிறை வைத்தனர். அவர்களை, போரில் ஈடுபட்டவர்களுடன், உறவு கொள்ளு மாறு கட்டளையிட்டனர். அதை ஏற்க மறுத்த அவர்களை, இரக்கமின்றி கழுத்தை அறுத்துக் கொன்றனர். பயங்கரவாதிகள், ஆக்கிரமிப்பின்போது, கிறிஸ்துவ மதப் பிரிவுகளைச் சேர்ந்த சிறுமியரையும், இளம் பெண்களையும் தான், கடத்துகின்றனர். அவர்களில், 9 வயது வரை உள்ள சிறுமியரை, நல்ல விலைக்கு விற்று விடுகின்றனர். இதற்கென அடிமைச் சந்தை உள்ளது. அங்கு, இளம் பெண்களை நிர்வாணமாக்கி ஏலம் விடுகின்றனர். அதிக தொகை கேட்பவர்களுக்கு அப்பெண்களை விற்கின்றனர்...

(இதுதொடர்பான கட்டுரையை 23-ம் பக்கம் பார்க்க...)

# போப் பிரான்சிஸ்...
## சமாதானத் தூதுவர்..?!

- எம். சேவியர் சந்திரகுமார்



உலகத்தின் *266*–வது போப்பாண்டவர் இந்த பிரான்சிஸ். கடந்த இதழ்களில் குறிப்பிட்டபடி சுமார் *800* ஆண்டுகளுக்கு முன்பு உலக முடிவுக்குள் வரப்போவதாக புனித மலாக்கியாவால் குறிக்கப்பட்ட கடைசி போப்பான *111*–வது போப்பாண்டவரும் இவரே.

இவர் அடிக்கடி கூறுகின்ற ஒரே வார்த்தை “இறைவா என்னை உமது சமாதானத்தை உலகுக்கு கொண்டு வரும் கருவியாக என்னை மாற்று” என்பதேயாகும். சமாதானத்திற்காக அப்படி என்ன சாதித்துவிட்டார் இவர் என்று கேட்கத் தோன்று கின்றதல்லவா..?

உலகத்திலுள்ள கம்யூனிஸ நாடுகளுள் மிகப் பழமையான நாடுதான் கியூபா. கம்யூனிஸ கொள்கைகளில் அப்படியொரு பிடிப்புடன் செயல்பட்ட கியூபாவின அதிபர் பிடல் காஸ்ட்ரோ ஒரு இரும்பு மனிதராக – அதே நேரத்தில் "பெரியண்ணன்" அமெரிக்கா வுக்கு சிம்ம சொப்பனமாகவும் திகழ்ந்தார்.

பெரியண்ணன் அமெரிக்கா உலகில் கம்யூனி ஸத்தின் பிடியை தளர்த்த வேண்டுமென்றால், கம்யூனிஸ தேசமான சோவியத் ரஷ்யாவை அடக்கி வைக்க வேண்டு மென்று தீர்மானித்தது. இதன் தொடர்ச்சி கியூபாவும் 70–க்கு மேற்பட்ட படையெடுப்புகள், ஒப்பந்தங்கள் போட்டுப் பார்த்தது.

இந்த நேரத்தில் கியூபா வின் காஸ்ட்ரோ அதிபயங்கர மாக வளர்ந்து வந்ததையும் அமெரிக்கா கவனிக்கத் தவறில்லை. யாரும் எதிர்பார்க் காத வகையில் ரஷ்யாவும் கியூபாவும் சர்க்கரை ஒப்பந்த மொன்றை கையெழுத்திட்ட போதுதான், காஸ்ட்ரோவின் இரும்புத்தனத்தை உணர்ந்து அமெரிக்கா. ஆக, அமெரிக்கா வின் முழு முதல் பகை நாடாக மாறியது கியூபா.

இப்படிப்பட்ட ஏழாம் பொருத்தத்திலுள்ள அமெரிக்கா கியூபா உறவை சரி செய்யும் அலசியத்தை போப் பிரான்சிஸ் உணர்ந்தாரோ என்னவோ, கடந்த மார்ச் மாதம் அமெரிக்க அதிபர் பராக்


கியூபாவுக்காக
ஓபாமாவிடம் பேச்சு...



பரம எதிரிகளான
கியூபா அதிபரும் ஓபாமாவும்

ஒபாமா, வத்திகானில் போப் பாண்டவரை மரியாதை நிமித் தமாக சந்தித்தபோது போப், கியூபா – அமெரிக்கா நல்லுற வை வளர்க்கும் அவசியத்தை ஒபாமாவிடம் எடுத்துரைத்தார் ''பெரியண்ணனும்'' தலையாட்டினார்.

அதன்பின் என்ன? கியூபா அதிபர் ரால் காஸ்ட் ரோவும் அமெரிக்க அதிபர் ஒபாமாவும் ஒரு ஒப்பந்தம் சம்பந்தமாக தொலைபேசியில் உரையாடி. உறவை ஆரம்பித் தார்கள். முன்னதாக தமது போப்பாண்டவர் என்ன செய்தார் தெரியுமா..?

கியூபாவுக்கு நேரில் விஜயம் செய்தார்.! சரித்திரத் தில் கியூபாவுக்கு பறந்து சென்ற ஒரே போப்பாண்டவர் பிரான்சிஸ் தான்.



எலியும் பூனையுமானஇஸ்ரேல்
பிரதமரையும் பாலஸ்தீன அதிபரையும்
சந்திக்க வைத்து மகிழ்கின்ற போப்...

இவரது இந்த கியூபா பயணத்தின் நோக்கம்..? முதலாவதாக தனது சொந்த "மந்தை"யிலுள்ளவர்களிடையே நிலவிவந்த கசப்புகளை துடைக்கவும், இரண்டாவதாக, பிற திருச்சபைகள் மற்றும் காஸ்ட்ரோவின் அரசாங்கத்துடனேயுள்ள காயங்களைக்கட்டவுமேயாகும்என்று கூறுகின்றார்கள் அரசியல் நோக்கர்கள்.

போப்பாண்டவராக ஆகி ஒரேயொரு ஆண்டுதான் ஆகிறது. அதற்குள் இதோ மேலும் பல சமாதானத் தூதினை தூக்கிப் பறந்திருக்கிறது இந்த பிரான்சிஸ் புறா..

கடந்த ஆகஸ்ட் மாதம் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்ல தனது பயணத் திட்டத்தை வகுத்திருந்தார் போப். தென் கொரியா செல்லும் வழியில் விமானம் சைனாவின் எல்லைகளினுடையே பறப்பதற்கு அனுமதி பெற்று, அந்த வகையில் ஒரு திட்டத்தை வகுத்து விட்டார் இந்த பிரான்சிஸ் போப்.

சீன அதிபர் சீ ஜின்பிங்கிற்கு சமாதான நல்லெண்ணத்தை வானிலிருந்தே விதைத்தபடி சீன எல்லையைக் கடந்திருக்கிறது இந்த வெள்ளையங்கி புறா என்றால், இவரது சமாதான வேட்கையின் அளவை நாம் யூகித்துத்தான் ஆக வேண்டும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.! இந்த நல்லெண்ணத் தூதின் அடுத்த பக்கம் என்ன தெரியுமா? சீனகிறிஸ்தவர்களை இன்றுங்கூட தேவாலயங்களின் கதவுகளை இறுக்கிப் பூட்டி வைத்த நிலையில் உள்ளிருந்து பிரார்த்தனை செய்யவும் அல்லது அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆலயங்களிலே (கிறிஸ்தவ ஆலயங்களின்தான்) பிரார்த்தனை செய்ய நிர்ப்பந்தம் செய்யவுமான சீன அரசின் கெடுபிடிகளை தளர்த்தும் நோக்கத்தில் தனது நாடான வத்திக்கானின் உறவை சீனாவுடன் புதுப்பித்துக்கொள்வதே இந்த நல்லெண்ணத் தூதின் நோக்கம் என்கின்றார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

போப்பாண்டவர் பிரான்சிஸ் செய்த அடுத்த காரியம் இன்னும் புதுமையானது. திடீரென்று ஒருநாள் தனது தொலைபேசியைக் கையிலெடுத்தவர் ஒருவருக்கொருவர் எலியும் பூனையுமாக சண்டையிட்டுக் கொண்டிருந்த இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அதிபர்களிடம் பேசினார்.

உலகிலேயே சண்டை போடுவதில் முதலிடம் பிடித்த நாடுதான் இஸ்ரேல்.

இஸ்ரேல் சும்மா இருந்தாலும் அதனை நிம்மதியாக இருக்க விடவில்லை இஸ்ரேலைச் சுற்றியுள்ள 23 அரபு நாடுகள். சுண்டைக்காய் அளவேயுள்ள இந்த இஸ்ரேலை இத்தனை நாடுகளும் எதிர்



21 கிறிஸ்தவர்களை சிறைச்சேதம் செய்கின்ற ஐ.எஸ்.எஸ். தீவிரவாதிகள்

கொண்டு ஒருசேர எதிர்த்த போதிலும், ஒருமுறையேனும் இஸ்ரேல் தோற்றதில்லை என்பது தனிக்கதை.



குண்டு மழைகளிலே நனையும் அரபு நாடுகளிடையே சாமாதானத் தூதினை விளக்கும் கருத்துப்படம்



சமாதானப் புறா இந்த போப்பாண்டவர் என்று விளக்கும் கருத்துப்படம்.

ஆக இஸ்ரேலின் எதிர்ப் புப் பட்டியலில் பிரதானமாக இருந்த நாடுதான் பாலஸ்தீனம். இப்படிப்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த இரண்டு நாடுகளின் அதிபர்களான இஸ்ரேலிய அதிபரான பெரஸ் மற்றும் பாலஸ்தீன அதிபரான அப்பாஸ் ஆகியோருடன் அப்படியொடு நட்புடன் பேச வைக்க போப்பாண்டவருக்கு உள்ளத்தின் உறுதி வந்தது எப்படி..?

அடுத்த முயற்சியாக முன்னர் குறிப்பிட்டபடி இஸ்ரேல்,


போப் பிரான்சிஸுக்கு நன்றி சொல்லி ஐ.நா. சபையில் உரையாற்ற அழைப்பு விடுக்கும் ஐ.நா.வின் தலைவர் பான் கீ மூன்

பாலஸ்தீனம் போன்ற இந்த நாடுகளுக்கு போப்பாண்டவர் பயணித்து உண்மையி லேயே ஒரு சதம் அடித்திருக்கிறார் என்றால்... அது என்ன சதம்..?

பல்லாண்டுகளாக இந்நாட்டிலே 1054 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாக உடைந்திருந்த கத்தோலிக்க சமயத்தை அதன் பகைமை நடைமுறைகளிலிருந்து மீட்டு, மீண்டும் ஒன்றாக மாற்றி புதிய சாதனையைப் படைத்திருக் கிறார் இந்த ஜார்ஜ் மரியே பொகோக்லியோ என்ற பிரான்சிஸ்.!!

பொதுவாக இதற்கு முந்திய போப்பாண்டவர்களெல்லாம் இந்த நாடுகளிலேயே நிலவி யிருந்த இந்த பிரிவினைகளின் ஓரத்திலேயே கவனமாக பயணித்திருந்த நிலையில் இவர் என்னடா என்றால் அந்த பிரிவினைகளினூடே புகுந்து கரணமடித்து வெளி வந்திருக் கிறார் என்றால் பலே.. பலே...

கடந்த அக்டோபர் மாதம் இவர் நடத்திய குடும்ப வாழ்வு பற்றிய கருத்தரங்கில் கத்தோலிக்கத் திருச்சபை, சகல தரப்பினரோடும் குறிப்பாக, ஓரினச் சேர்க்கையாளரிடம்



கூட பரிவும் பாசமும் காட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார் என்றால் இந்த போப்பாண்டவரின் சமாதான வேட்கையை ஒரு கனம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

சமாதானத்துக்காக ஏங்கும் இந்த வெள்ளைப்புறாவின் கண்ணில் அடுத்தபடியாக பட்ட நாடுதான் சிரியா...!

தன் இனத்து மக்களையே கொன்று குவிப்பதில் வல்லவர்கள் இவர்கள். 95% முஸ்லிம்களைக்கொண்ட இந்தநாட்டில் சன்னி முஸ்லிம்களுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் ஏழாம் பொருத்தம்!

ஒருவரையொருவர் கொன்று குவித்து சாதனை படைத்துள்ள இந்த சிரியா நாட்டில், சிறுபான்மையினரான கிறிஸ்தவர்களை ஓரிடத்தில் கூட்டி கண்களைக் கட்டி கசாப்பு கடை ஆடுகளை வெட்டுவது போன்று ஒருசேர தலைகளை வெட்டி, படுபாதகச் செயல்களை அரங்கேற்றிய வேளையில் கூட அதனை வன்மையாகக் கண்டித்த அதே வேளையில் அமைதிக்காக பிரார்த்தனை செய்தார் போப்.

இவ்வாறான கொடூரங்களை அரங்கேற்றி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா உட்பட பல நாடுகள் தங்களது ராணுவத்தை சிரியாவில் களமிறக்கிய போது கூட தனது சொந்த கிறிஸ்தவ ஜனங்களைக் கொன்ற நிகழ்வை விட தனக்குள் அடித்துக்கொண்டிருக்கிறார்களே, அதனை நினைந்து உலகை ஜெபம் செய்ய பணித்தவர்தாம் இந்த போப்பாண்டவர்.!

சமாதான வேட்கை இத்துடன் தனியவில்லை. போப்பாண்டவருக்கு !

இந்த வருடம் ஜூன் மாதம் அதாவது இரண்டே மாதங்களுக்கு முன்னர் யாருமே எதிர்பார்க்காத ஒரு கூட்டத்தை வத்திக்கானில் கூட்டினார் போப் பிரான்சிஸ். அதாவது,

## ‘பப்பா’ என்று அழுந்த உச்சரிக்கும் ஒரு வார்த்தைக்குதான் எத்தனை சக்தி!

லட்சக்கணக்கானவர்கள் “பப்பா” என்று ஒரு சேர அழைக்கும்போது அதிலுள்ள ஒருமித்த சக்தி, பாசம் ஆகியவற்றை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. இப்படித்தான் போப்பாண்டவரை இன்றும் அழைக்கின்றார்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்.!

யார் இந்த போப்பாண்டவர்..? என்கின்ற பப்பா... அப்பா..?

பரம தகப்பனான இயேசுவால் திருச்சபையின் தலைவராக அன்றே நியமிக்கப்பட்டாரே அந்த இராயப்பராகிய பேதுருவின்



வழித்தோன்றல்தான் இந்த “பப்பா” என்று அன்புடன் அழைக்கப்படும் போப்பாண்டவர். இந்த மதிப்பு எவ்வாறு இவருக்கு வந்தது என்பதற்கு ஒரே விடை இறைவனே தனது வாயால் அன்று கூறினாரே “எனது திருச்சபையின் தலைவர் இவரே” என்று தனது சீடராகிய போதுருவைப் பார்த்து அதுதான் காரணம்.!

இன்றைக்குங்கூட போப்பாண்டவர் தரிசனம் தருகின்றாரென்றால், அங்கே இலட்சக்கணக்கானவர்கள் கைகளில் தத்தமது நாட்டுக் கொடிகளை கையிலேந்தி குவிந்து விடுகிறார்கள். 50 லட்சம் பேரை ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூட்டுவது இவருக்கு சாதாரணம்.

மாதந்தோறும் குறிப்பிட்ட தினங்களில் தான் தங்கியிருக்கும் ரோமாபுரியின் புனித பீட்டர் சதுக்கத்தின் பால்கனியில் காட்சி தரும்போது அங்கும் லட்சத்தில்தான் மக்கள்.!

முதலில் பால்கனி தரிசனம், அருளுரை, பின்னர் கூட்டத்



திலுள்ளே குண்டு துளைக்காத வாகனத்தில் ஏறி பயணம். பாம்பு போன்று அங்குமிங்கும் நெளிந்து செல்லும் பாதையில் போப்பாண்டவர் இரு கைகளையும் குவித்து ஆசி வழங்கும் காட்சியை காண கண் கோடி வேண்டும்.

கண் சிமிட்டும் ஆயிரமாயிரம் கேமராக்களிளென்ன தொலைக்காட்சிகளில் நேரலை என்ன..! அனைத்துக்கும் ஈடு கொடுத்து வலம் வரும் அழகை வர்ணிக்க வார்த்தைகளில்லை. இத்தனை கெடுபிடிகள் மத்தியிலும் ஆங்காங்கே வாகனத்தை ஒரு சிறிது நேரம் நிறுத்தி ஒரு கணத்தில் வெள்ளை அங்கி மறைந்த தனது கைகளை வெளியே நீட்டி, கையில் கிடைத்த குழந்தைகளுக்கு அன்பு முத்தம் கொடுக்க அங்கே இறைவன் இயேசுவையல்லவா பிரதிபலிக்கிறார் என்று ஆர்ப்பரிக்கிறது கூட்டம்.

ஆம்! சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள். ஏனென்றால், மோட்ச இராட்சியம் இவர்களைப் போன்ற உள்ளம் படைத்தவர்களுக்கே என்று அன்று கூறினாரே இயேசு, அவரது வழித்தோன்றலானதால்தான் என்னவோ எல்லா போப்பாண்டவர்களுமே குழந்தை பிரியர்களாக இருக்கிறார்களோ..?

ஐக்கிய நாடுகள் சபை விரைவில் உலகம் தழுவி முடிவெடுக்கப் போகும் சுற்றுச்சூழல் மாற்றம் பற்றிய மாநாடு எந்த வகையில் சரியான பாதையில் செல்ல வேண்டுமென வலியுறுத்தும் கூட்டத்தைதான் இங்கு தனது தலைமையில் கூட்டினார் போப்.


இயற்கையையும், சுற்றுச்சூழலையும் பாதிக்கும் நிகழ்வுகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் மனிதனின் பல்வேறு நடவடிக்கைகளால், வான்வெளி மண்டலம் பழுதடைந்து, அதனால் பூமிக்கு பேரழிவை ஏற்படுத்தப்போகும் அபாயத்திலிருந்து எவ்வாறு உலகத்தை தப்புவிப்பது என்பதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று போப் இந்தமாநாட்டின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.!

இந்த ஒரு உறுதியான நடவடிக்கையை எடுத்த போப் பிரான்சிஸை ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் பான் கீமூன் பெரிதாக பாராட்டியதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.




உலகின் மிகப்பெரிய பத்திரிகையான "டைம்" பத்திரிகை அவரை அட்டைப் படத்தில் அச்சிட்டு பெருமைப் படுத்தியது.

**இன்றைய உலகின் சமாதானக் காவலர்களாக போப்பாண்டவர் பிரான்சிஸ் திகழ்வது நமக்கெல்லாம் பெருமைதான்.!**



முதல் போப்பாண்டவராகிய இயேசுவின் சீடர் புனித பேதுருவை தலைகீழ் சிலுவை அறைத்து கொல்லும் காட்சி

# இரத்தம் சிந்திய போப்பாண்டவர்கள்..!

முதல் போப்பாண்டவராகிய இராயப்பர் என்ற பேதுரு, இயேசுவின் பன்னிரு சீடர்களுள் ஒருவராக இருந்த பொழுது, இயேசுவைக் கொலை செய்ய யூதர்கள்

புனித மலாக்கியா சுமார் 800 வருடங்களுக்கு முன்னர் கண்ட காட்சியின்படி உலக முடிவுக்குள் 111 போப்பாண்டவர்களே திருச் சபையை ஆளுவார்கள் என்று முன்னறிவித்திருந்தார். அவர் கூறியபடியே அச்சுப்பிசகாது அப்படியே இதுவரை நடந்துள்ளது என்பதை கடந்த வடவை மாதா குரலொலி இதழ்களில் பார்த்தோம்.

## போப் பிரான்சிஸ்க்குப் பின்னர்...?

இந்த 3–வது போப்பாண்டவராகிய பிரான்சிஸ் கடினமான பாதைகளுக்கிடையே

தேடியபொழுது "இயேசு என்பவரை எனக்குத் தெரியாது"என்று மறுத்தலித்தவர் தாம்.

ஆனால் இயேசு இறந்து உயிர்த்தபின் அசைக்க முடியாத பாறைபோன்று இயேசுவை விசுவாசிப்பதில் மனவுறுதியைக் காட்டிய காரணத்தால் இந்த "பாறையின்" மீது எனது திருச்சபையைக் கட்டுவேன், மோட்சத்தின் திறவுகோலை உனக்குக் கொடுக்கிறேன்" என்று இயேசு கூறி அவரது முதல் வாரிசாக நியமித்த செய்தி பைபிளில் காணப்படுகிறது.

ஆக, இந்த போப்பாண்டவர் தொடங்கி இப்பொழுதுள்ள 266-வது போப்பான பிரான்சிஸ் வரை ஏராளமான போப்பாண்டவர் களை பல்வேறு சூழ்நிலைகளில் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதே வேதனைக் குரிய அம்சம்.

இயேசுவை ஒரு காலத்தில் மறுத் தலித்து பிறகு திருச்சபையின் முதல் தலைவராக அமர்ந்த பேதுருவை கொடியவர்கள் சூழ்ந்தார்கள். அப்போது பேதுரு என்ன சொன்னார் தெரியுமா?

எப்பெருமானாகிய இயேசுவை நேராக சிலுவையில் அறைந்தீர்கள். என்னையும் அவ்வாறே செய்தால் இயேசுவுக்கு மகிமை அல்ல. நான் புழு போன்றவன். என்னை தலை கீழாக சிலுவையில் அறையுங்கள் என்று மார்பை நிமிர்த்தி சாவுக்குக் கையளித்து இவ்வாறாக திபாக ரத்தத்தை மண்ணில் சிதற விட்டவர்தாம் இந்த முதல் போப்பாண்டவராகிய பேதுரு.

அவரது வழித்தோன்றல்களான இப்போதுள்ள பிரான்சிஸ் வரை 266-வது போப்புகளில் பலர் பலவிதமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.!!

இதோ அந்த பெயர் பட்டியல்...

போப் லீனஸ், போப் க்ளீட்டஸ் (புனிதர்), போப் க்ளமெண்ட் (புனிதர்), போப் எவரிஸ்டஸ் (புனிதர்), போப் அலெக்ஸாண்டர் (புனிதர்), போப் சிக்ஸ்டஸ் (புனிதர்), போப் டெலிபோர்ஸ் (புனிதர்), போப் ஹைஜீனஸ் (புனிதர்), போப் பபஸ் (புனிதர்), போப் அனிஸிட்டஸ் (புனிதர்), போப் சோடர் (புனிதர்), போப் எலிட்டரஸ் (புனிதர்), போப் விக்டர் (புனிதர்), போப் கலிக்ஸ்டஸ் (புனிதர்), போப் அர்பன் (புனிதர்), போப் போண்டன் (புனிதர்), போப் அண்டிரஸ் (புனிதர்), போப் பேபியன் (புனிதர்), போப் சொர்னேலியுஸ் (புனிதர்), போப் லூலியஸ் (புனிதர்), போப் ஸ்டீபன் (புனிதர்), போப் சிக்ஸ்டல்-2 (புனிதர்), போப் டாயன்சியஸ் (புனிதர்), போப் பெலிக்ஸ் (புனிதர்), போப் ஈச்சியன் (புனிதர்), போப் கேயுஸ் (புனிதர்), போப் மெர்சலினஸ் (புனிதர்), போப் இசபியஸ் (புனிதர்), போப் மார்ட்டின் (புனிதர்), போப் ஜான்-12 (புனிதர்), போப் பெனடிக்ட் (புனிதர்)

இன்னும் 20-க்கும் மேற்பட்ட போப்புகள், ஆக மொத்தம் சுமார் 50 போப்பாண்டவர்கள் கொல்லப்பட்டு, ரத்தம் சிந்திதான் இந்த திருச் சபையை வளர்த்துள்ளனர்.

இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்று தெரியுமா...? கழுத்தை நெறித்து, கடலில் தூக்கிப்போட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, விஷமிட்டு, கழுத்தை அறுத்து, தலையணையால் அமுக்கப்பட்டு, கட்டிடத்தை தலையில் விழ வைத்து, சதி செய்யப்பட்டு என்று பலவிதமான கொடூர முறையில் இவர்கள் கொலை செய்யப் பட்டார்கள்.

**தன்னையழித்து திருச்சபையைக் காத்த தியாகிகளல்லவா இவர்கள்...!**

*தனது மந்தையை வழி நடத்துவார் என்று முடிவுரை கூறும் புனித மலாக்கியா, கடைசியில் கூறுகின்ற வார்த்தை "பரம் நீதிபதி உலகத்தை நடுத்தீர்ப்பார் இதுதான் முடிவு,, என்று தீர்க்க தரிசனத்தை முடிக்கிறார் அவர். இதன் பொருள் என்ன..? போப் பிரான்சிஸ் காலத்துக்குப் பின் உலகம் அழிந்து விடுமா..?*

*உலக முடிவு பற்றி இயேசு கூறும்பொழுது "உலகம் முடியும் "அந்த நாளை, பிதா தவிர யாரும் அறியார்,, என்று குறிப்பிடுவதிலிருந்தே, உலக முடிவுக்கான திட்டம் மனிதனின் கணக்குகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்பது நிரூபிக்கப்படுகிறது.* ◗



# குடி... குடியைக்...

"குடின்னு குடின்னு குடிச்சி நாசமா போறாரு இந்த மனுஷன்" காலையிலேயே அங்கலாய்ந்த கமலிய பார்த்து முறைத்தான் குமார். ரெண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன். இப்படி பொறுப்பு இல்லாம பெரிய பருப்பு மாதிரி திரிவது கமலிக்கு மட்டுமல்ல. அவளுடைய பிள்ளை களுக்கும் எப்போதுமே வருத்தம்தான்.

நல்லாத்தான் இருந்தான் குமார், அவன் நண்பர்கள் கூட்டம் பார்ட்டி பார்ட்டின்னு கூட்டிக்கிட்டுப் போய் இப்போ முழு நேர குடிகாரனாயிட்டான். கடைய எப்போ சார் தெறப்பீங்க அப்படின்னு வடிவேல் ரேஞ்சுக்கு போய்விட்டான் குமார்.

பிள்ளைகள் ரெண்டும் "அப்பா குடிக் காதீங்க, குடிக்காதீங்க" அப்படின்னு சொல்லி சொல்லி அலுத்துப்போய்விட்டதுகள். "இனி அந்த பரலோக மாதா விட்ட வழி" அப்படின்னு விட்டு விட்டு விட்டார்கள்.

எதுவும் கேட்டால் ; அப்போ வேற வாயி இப்போ நார வாயி அப்படின்னு வடிவேல் பாணியில பிதற்ற ஆரம்பித்து விடுவான்.

அப்பா திருநாள் வருது குடிக்காம நல்ல அப்பாவா இருங்க எங்களுக்கு புது ட்ரெஸ் எடுத்துத் தாங்க என்று ரெண்டு பிள்ளைகளும் கேட்டது.

"ஓ அப்படியா திருநாள் வருதா அப்போ எல்லா பயல்களும் வருவாங்க டெய்லி தண்ணி பார்ட்டிதான்" என குதூகலம் பாடினான் குமார்.

பிள்ளைகள் என்ன பாஸ் மார்க் வாங்கி னார்களா என்று அவனுக்கு என்ன தெரியும். அவனுக்குத்தெரிந்ததெல்லாம்டாஸ்மாக்தானே.

ஊரே விழாகோலம் காண தயாராகிக் கொண்டிருந்தது.

இந்த குமார் மட்டும் எப்படி தண்ணி பார்ட்டி எங்கே கொண்டாடலாம் என கணக்குப் போட்டுக் கொண்டு இருந்தான். அவனுடைய பிள்ளைகளோ புது ட்ரெஸ் கிடைக்குமா..? கிடைக் காதா..? என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

கமலி அந்த பரலோக அன்னையிடம் மனதுருகி வேண்டிக் கொண்டிருந்தாள்.

குமார் அவனுடைய உதவாக்கரை நண்பர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து இருக்கிற ார்கள் என கிளம்பிவிட்டான்.

உயர் மது வகைகள் இருக்கும், அவன் பாடு கொண்டாட்டம் என நினைத்து குடிக்கக் கிளம்பிவிட்டான். அவனுடைய மனைவி, பிள்ளைகளைமறந்தான். அவனுடையநண்பர்கள் எல்லாம் வெளி நாட்டிலிருந்து சம்பாதித்துவிட்டு காரிய குடி குடிக்கிறார்கள் என்பதை மறந்து நன்றாக குடித்தான்,

நீ குடிப்பது தவறு உன் மனைவி, பிள்ளைகள் உனக்கு மிகவும் முக்கியம் என்று சொல்ல உண்மையான நண்பன் யாரும் இல்லை. யார் நல்ல நண்பன்..? என்று பகுத்தறிய தெரியாதவனல்லவா இந்த குமார்...?

“சாத்தான் யாரை விழுங்கலாம் எனும் கர்ச்சிக்கும சிங்கம்போல் சுற்றித் திரிகிறான்” என்ற விவிலிய வாக்கையும் மறந்தான். தன்னை மறந்த நிலையில் வீட்டுக்கு சென்றான்.

ஆனால் பரலோக அன்னையின் திட்டம் வேறு விதமாக இருந்தது.

“கமலி, பிள்ளைகளா” என குளறிய படியே கதவை தட்டினான் குமார்.


கதவு திறந்தது, அங்கு அவன் கண்ட காட்சி போதையை இறங்கச் செய்தது.

அங்கு கமலி அவன் பிள்ளைகள் குடிப்பதற்காக குடி பாட்டில் மற்றும் சைடிஷ் வகைகளை வைத்துக் கொண்டிருப்பதுபோல் ஒரு காட்சி! அப்படியே பதறிப் போனான் குமார்.

குப்புற விழுந்தான், தன்னை மன்னிக்கும் படி கடவு ளிடம் வேண்டினான். இந்த நிலைமை தன் குடும்பத்துக்கு வரக்கூடாது என மனதுருகி வேண்டினான்.



**சுரேஷ்பாபு**
வடக்கன்குளம்.



கமலியும் பிள்ளைகளும் என்ன என்ன என பதறினார்கள்.

இது பரலோக மாதாவின் திட்டம். அவன் கண்களுக்கு அப்படி ஒரு காட்சியை காட்டி அவன் திருந்துவதற்கு வழி காட்டினார்கள்.

இனி இந்த தப்பை செய்ய மாட்டேன் என கமலியிடமும் பிள்ளைகளிடமும் கெஞ்சி னான். கமலிக்கு புரிந்தது, பரலோக மாதாவின் அருளானது குமாரை மாற்றிவிட்டது என பரலோக அன்னைக்கு மனதார நன்றி சொன்னாள். எல்லோரும் கோவிலுக்கு புறப் பட்டார்கள். எல்லாம்வல்ல இறைவனுக்கும் விண்ணரசிக்கும் நன்றி சொல்ல.






சகோதரி அல்போன்சாவைத் தொடர்ந்து கேரளாவைச் சேர்ந்த ஃபாதர் குரியகோஸ், சிஸ்டர் ஏப்ரசியா போன்றவர் களுக்கு புனிதர் பட்டம் வழங்கி கௌரவப்படுத்தியிருக்கிறார் திருத்தந்தை போப் பிரான்சிஸ்.

இயேசுவின் சீடர்களுள் ஒரவரான தோமையார், கேரளக் கடற்கரையோரங்களில் கிறிஸ்தவ சமயத்தை பரப்பியவாறே சென்னைக்கும் பிற மாநிலங் களுக்கும் சென்றார். அவரைப் பின்பற்றி சிரியன் மலபார் திருச்சபை வேகமாகப் பரவியது கேரளாவில்...

ஏற்கெனவே இந்த சபையைச் சார்ந்த அல்போன்சாவைத் தொடர்ந்து இப்போது அதே சபையைச் சேர்ந்த இந்த இருவருக்கும் புனிதர் பட்டம் கிடைத்தது.

நமக்கெல்லாம் பெருமை என்று இந்திய கிறிஸ்தவர்கள் பெருமைப்படுகிறார்கள்.

புனிதர்பட்டம் வழங்குவதற்காக வாடிகனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவின்போது, திருத்தந்தை பிரான்ஸிஸ் இந்தியக் கொடியை பட்டொளி வீசி பறக்க விட்ட காட்சி இந்தியர்களுக்கு இதமானது என்று நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள் என்பது கூடுதல் செய்தி.

# இதோ... இந்தியாவுக்கு இன்னும் சில புனிதர்கள்...

# வடவை மாதா ஆலயத்தில் மாற்றங்கண்ட தேர்.!


அலங்கரிக்கப்பட்ட புதிய தேர்



பயணிகள் மாதாவை தாங்கிய பழைய தேர்

பரிசுத்த பரலோக மாதாவின் தேர் பல இலட்சங்கள் பொருட் செலவில் புதியதோர் தோற்றத்துடன் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக் கப்பட்டுள்ளது. முன்னர்போல, தேரில் வண்ண தாள்கள் ஒட்டி அழகுபடுத்த வேண்டிய அவசிய மில்லை.

நூதன வண்ணக் கலவையை மரத்தில் நேர்த்தியாக அடித்துள் ளதால் ஒளி விளக்கின் பிரதி பலிப்பில் தேர் மின்னுகிறது.

பழைய தேர் என்னவாயிற்று...?

அதை அப்படியே கொண்டு சென்று பயணிகள் மாதாவை தேரில் வைத்த நிலையில் ரோச் மைதானத்தின் தெருச்சந்து கூடுமிடத்தில் வைத்திருப்பது காண்போரை கவர்கிறது என்பதில் ஐயமில்லை. இதனை நேர்த்தியாக செய்த பெருமை வடக்கன்குளம் பங்குத் தந்தை அருட்திரு **ததேயுஸ் ராஜன்** அடிகளாரையே ஆரும். இந்த திருப்பணிகளுக்கான செலவு பிரத்தியேக நன்கொடை மூலம் திரட்டப்பட்டதை இங்கு சொல்லியாக வேண்டும்.

## முன்னாள் பங்குத் தந்தைக்கு விருது..!



அன்னை தெரசா விருதைப் பெற்றிருக்கிறார் அருட்தந்தை நெல்சன் பால்ராஜ். இவர் வடக்கன் குளத்தின் முன்னாள் பங்குத்தந்தையும், இலங்கநாத புரத்தின் இந்நாள் பங்குத்தந்தையுமாவார்.

பொதுவாகவே, கத்தோலிக்க குருவானவர்கள் எந்த பங்குக்கு மாற்றலாகிச் சென்றாலும், அந்தந்த இடங்களில் தனது முத்திரையை பதியச் செய்வது போன்று ஏதாவதொரு புதிய செயல்பாடுகளை ஞானகாரியங்களில் செய்வார்கள்.

ஆனால், நெல்சன் பால்ராஜோ வடக்கன் குளத்திலிருந்தபோது தமிழை வளர்த்த தனிநாயகம் அடிகளாருக்கு புனித தெரசாள் உயர் நிலைப்பள்ளி வளாகத்தில் சிலையமைத்து அதனை பெரும் விழாவாகக் கொண்டாடினார். அது தவிர முதியோர் உதவித் திட்டம், ஏழை மாணவருக்கு கல்வி உதவித் திட்டம், மருத்துவ உதவித் திட்டம் போன்றவற்றிற்கான நிதியையும் ஏற்படுத்தித் தந்தார்.

விருதைப் பெறுவதற்காக சென்னை வந்திருந்த அவரிடம் நாம் கேட்டபொழுது "அன்னை தெரசாவை ஒப்பிடும்போது இது இலட்சத்தில் ஒன்றே. ஆனால், இதுபோன்ற விருதுகள், என்னை போன்ற தொண்டு செய்பவர்களுக்கான ஊக்கம்தானேயொழிய வேறல்ல" என்றார் அடக்கமாக.



# தாலிபன் பிடியிலிருந்த தப்பித்த தந்தை அலெக்சிஸ்

ஒன்றல்ல... இரண்டல்ல... எட்டு மாதங்கள் சிறைப்பிடித்து வைத்திருந்தனர். கத்தோலிக்க குருவானவர் ஒருவரை!

அவர்தான் அலெக்ஸிஸ் ப்ரேம்குமார்!! கடத்தியவர்கள் தாலிபன் தீவிரவாதிகள் என்று எட்டு மாத பிடியிலிருந்து மீண்டு தனது சொந்த ஊருக்கு வந்த ஃபாதர் ப்ரேம் குமாரை ஒட்டுமொத்த கிராமமே வரவேற்றது.

"எனக்கு மூன்று பெயர்கள்" என்று பேச்சை ஆரம்பித்தார் அவர்.

"ஆரம்பத்தில் அண்ணாதுரை அதன்பின் அலெக்ஸிஸ் ப்ரேம்குமார். தாலிபான்கள் எனக்கு வைத்த பெயர் அஸ்லாம்கான்" என்று கூறி சிரித்தார் ப்ரேம்குமார்.

"என்னைப் பாதுகாக்க தாலிபான்கள் படாதபாடு பட்டார்கள் ; எட்டு இடங்களுக்கு மாற்றினார்கள். அனைத்துமே குகைகள்! குல்லா அணிவித்து நீண்ட அங்கி போன்ற உடையை உடுத்தி, அவர்களைப்போலவே மாற்றினார்கள். அரசிடமிருந்து பணம் கறக்க இவ்வாறு அடைத்து வைப்பதாகக் கூறினார்கள்"

"இங்குதான் தியானமே செய்ய மனது தூண்டியதால், தியானம் செய்ய ஆரம்பித்தேன். பக்தியுடன் மாதாவை வேண்ட ஆரம்பித்தேன்" என்று தனது அனுபவத்தைக் கூற ஆரம்பித்தார் அலெக்ஸிஸ்.

*தீவிரவாதிகளின் இன்னொரு முகம் உலகுக்கு தெரிய*
*இச்சம்பவம் ஒரு வாய்ப்பு.... உஷார்...*

# உமாசங்கர் ஐ.ஏ.எஸ். க்கு.! சவால் விட்ட ஜைனுல் ஆபுதீன்..!





உமாசங்கர் ஐ.ஏ.எஸ். இந்து மதத்தி லிருந்து கிறிஸ்தவராக மாறிய ஒரு அதிகாரி.

“கிறிஸ்தவ மதப்பிரச்சாரம் செய்கிறார் என்பது ஒன்றே அவர்மேல் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டு. அவரவர் மதத்தை அவரவர் பின் பற்றுவதற்கும், பரப்புவதற்குமுள்ள உரிமையை இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார் உமாசங்கர்.

“நான் இந்து மதத்தினர் செய்வதுபோல, அரசு அலுவலகங்களில் சாமி படத்தை மாட்டி வைத்து பூஜை செய்யவில்லை. அலுவலகத்தில் வைத்து மதப்பிரச்சாரம் செய்யவில்லை. என்னு டைய ஓய்வு நேரத்தில் சனி, ஞாயிறு தினங்களில் எனக்கு அழைப்பு விடுக்கும் கிறிஸ்தவ குழுக் களுக்குச் சென்று கிறிஸ்துவைப் பற்றி போதிக் கிறேன். இதிலென்ன தவறு என்கின்றார் அவர். அவரது வாதமும் நடுநிலையானவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஆனால், அவர் இஸ்லாம் மதமும் இறை வனின் மதமல்ல என்பது போன்று கூறிய கருத் துக்கள்இஸ்லாமியர்கள்மத்தியில்கொந்தளிப்பை ஏற்படுத்தி, சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்த சம்பவமும் நடந்தேறியது. ஜைனுல் ஆபுதீன் என்பவர் ஒருபடி மேலே போய் உமாசங்கருக்கு சவால் விட்டார்.

“ஒரு கோடி பரிசு... நான் அழைத்து வரும் ஒரு முடவனையோ அல்லது வேறு வியாதி கள் உள்ளவனையோ குணமாக்க இயலுமா.. உமாசங்கரால்” என்கின்றார் இவர்.

இயேசு குருடரை பார்வையடைய வைக்கிறார். செவிடரை கேட்க வைக்கிறார் என்று ஏமாற்றுவதாக இவர் கூறுகிறார். இதுபற்றி உமாசங்கர் என்ன கூறுகிறார் என்று கேட்க அவரை அணுக முயன்றோம் அலுவலக நேரத்தில் இதுபற்றி பேச அனுமதிக் காததால் நம்மை அவர் சந்திக்க தாமதம் ஆகியது. அதற்குள் வடவை மாதா குரலொலி வெளியிட வேண்டியிருந்ததால் அது இயலவில்லை.

ஆனால் யாரை விட்டுக் கொடுத்தாலும் இயேசுவை விடுவதாக இல்லை என்ற மன உறுதி யுடன் அவரது ஓய்வு நேரங்களில் கிறிஸ்துவுக்காக தொடர்ந்து உழைப்பதாக அவரிடம் அழைத்துச் செல்ல முயற்சி செய்த திருவள்ளூரைச் சேர்ந்த பாஸ்டர் குமார் கூறினார்.

குமாருடன் கூட இருந்த நண்பர் கூறுகையில்...

“ஜைனுல் ஆபுதீன் விடுகின்ற ஒரு வியாபாரியைப் போன்றுள்ளது. அவர் ஏற்கெ னவே, ஒரு அகோரியிடம் சவால் விடுகிறேன் என்று ஒரு நாடகம் நடத்தினார். அவர் முன்னி லையில் இயேசு வானவர் அற்புதம் செய்ய வேண்டுமென்று சவால் விடுவதிலிருந்தே அவரது அறியாமைபுரிகிறது. சர்வவல்லவரானஇறைவன் இயேசு இதுபோன்றவர்களை திருப்திப்படுத்த வேண்டி, அவர் கூறும் விளம்பர சவாலுக்காக அங்கு தனது வல்லமையைக் காட்டுகிறேனென்று இறங்கி வந்து தன்னை ஒருபோதும் தாழ்த்த மாட்டார்.

இவர் போன்றவர்கள் மலிவு ரக விளம்ப ரத்துக்காகச் செய்யும் யுக்திகளைக் கண்டு கிறிஸ்தவர்கள் பயப்பட மாட்டார்கள். குருட னுக்கு தெரியுமா வெளிச்சத்தைப் பற்றி. அது போலவே இயேசுவைப் பற்றி அவர் போன்றவர் கள் ஒருபோதும் தெரிந்து கொள்ளப் போவ தில்லை” என்று முடித்துக் கொண்டார்.

அலைகள் ஓயாததுபோல இதுபோன்ற சர்ச்சைகளும் ஓயப்போவதில்லை போலும்.!

# வடவை மாதா ஆலயத்தின் சிறப்பு



திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது வடக்கன்குளம். இங்கு அமைந்துள்ளது புகழ் பெற்ற மாதா கோவில்.

சின்ன ரோமாபுரி என்று அழைக்கப்படும் வடக்கன்குளம் நகரம், 300 வருடங்களுக்கு முன் தோன்றிய ஒரு புரதான நகரம் ஆகும். இந்த நகரம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது.

அக்காலத்தில் இவ்வூர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை சேர்ந்திருந்தது. இவ்வாறு பல சிறப்புகள்பெற்றஇந்நகரத்தில்சுமார்125ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது இந்த மாதா கோவில். இக்கோவிலின் கட்டிடக் கலை ரோமாபுரி கட்டிடக் கலையை சார்ந்து இருக்கும். மாதா கோவில் மூன்று பிரிவாக அமைந்திருந்தாலும் எங்கிருந்து பார்த்தாலும் பீடம் நம்மைப் பார்த்து இருப்பதாகத் தோற்றமளிக்கும்.

எழிலார்ந்த கட்டிடக் கலையின் அழகும் கோவிலின் முக்கிய அம்சம் ஆகும். கோவிலின் உள்ளே அமைக்கப்பட்டிருக்கும் பலவித அளவுகளிலுள்ள கூடங்களுள் இரண்டுதான் மிகவும் விசாலமான கூடங்களாகும். இந்த இரு பெருங்கூடங்களும் இரு பெருக்கோவில்கள் என்று கூறப்படுகிறது. இக்கோவிலுக்கு நெல்லை, கன்னியாகுமரி, சிதம்பரனார் போன்று தென் மாவட்டங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் வந்து மாதாவை தரிசிப்பது உண்டு.

பல்வேறு நோயுள்ளவர்கள் இந்த மாதா கோவிலுக்கு சென்று வழிபட்டால் எப்பேர்பட்ட நோய்களும் குணமாகும் என்பது நம்பிக்கை. எனவே பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் இந்த கோவிலுக்கு வந்து மாதாவை வழிபாடு செய்கிறார்கள்.

குறிப்பாக வருடந்தோறும் ஆகஸ்ட் மாதத்தில் வடவை மாதா கோவிலில் தேர்த்திருவிழா நடப்பது உண்டு. திருவிழா இரவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுகிறார்கள், நள்ளிரவு 1 மணியளவில் மாதா தேர் பவனி வடக்கன்குளம் ரத வீதிகளில் வருவதை ஆர்வத்தோடு கண்டு வணங்குவார்கள்.

வண்ண விளக்குகளால் மாதாவின் ரதம் அலங்கரிக்கப்பட்டு வீதிஉலா வரும்! ரதத்தின் முன்பு ஆண்களும், பெண்களும் மாதா புகழ் பரப்பும் பாடல்களை பாடிச்செல்வர்.

பல்லாண்டு முன்பு வடவையரின் பாவங்களுக்காக கரம் விரித்து கண்ணீர் விட்ட அதே மாதாவின் சுரூபத்தை தேரில் வைத்து கொண்டு செல்வது தனிச்சிறப்பு.

இறைவன் புகழ்பாடும் புகழ் கீதங்களும், குருவானவரும், இறை மக்களும் சேர்ந்து ஜெபிக்கும் ஜெபங்களும் பக்திப் பரவசமாக இருக்கும்.

தேர்த்திருவிழாவின்போது வண்ண விளக்குகளால் இக்கோவில் அலங்கரிக்கப்பட்டிருப்பது பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சி.

# பாதிக்கப்படும் கிறிஸ்தவர்களும்... அப்பாவி முஸ்லிம்களும்...



உலகில் நாளுக்கு நாள் தீவிரவாதம் தலைவிரித்தாடுகிறது என்பதற்கு உதாரணம் தினமும் செய்தித்தாள்களில் வரும் இதுபற்றிய செய்திகளே..!

உலகெங்கும் படுகொலை செய்யப்பட்டு வரும் கிறிஸ்தவர்களும், அப்பாவி முஸ்லிம்களும் என்ன பாவம் செய்தார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது.

இதைப்பற்றி தெரிந்துகொள்வதற்கு முன்பு எங்கே, எப்படி இந்த தீவிரவாதம் ஆரம்பித்தது என்பன போன்ற செய்திகளை அறிவது நல்லதல்லவா..?





இஸ்லாத்தின் இறைத்தூதர் முகம்மது நபி (ஸல்)! இவரை மையமாகக் கொண்டே உலக முஸ்லிம்கள் அனைவரும் இயங்கு கின்றனர். கி.பி. 632 ஆம் ஆண்டில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறந்தார்.

அவருக்குப் பின் இஸ்லாத்தை யார் வழி நடத்துவது என்ற சர்ச்சை எழுந்தது. அது ''அலி'' என்பவரா, ''அபூபக்கர்''என்பவரா என்பதில் பயங்கர குழப்பம். கடைசியில் அபூபக்கரை வாரிசாக நியமித்தார்கள். இவரது வழி வந்தவர்கள்தான் ''சன்னி'' முஸ்லிம்கள் என்ற பிரிவினர். ஆனால் அபூபக்கர் நியமனத்தை ''அலி'' சாராரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆக, ''அலி'' வழி வந்தவர்களே ஷியா பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள். இது தவிர 70–க்கும் மேற்பட்ட உட்பிரிவுகள் உள்ளன என்பது தனிக்கதை.

உலகிலுள்ள மொத்த முஸ்லிம்களில் 85 சதவீதம் பேர் சன்னி முஸ்லிம்களாகவும், வெறும் 13% சதவீதம் பேர் ஷியா பிரிவின ராகவும் உள்ளனர். ஆக இந்த இரண்டு பிரிவினரிடையே எப்பொழுதும் ஒரு விதமான பகை இருந்து கொண்டே இருந்தது.

அவர்களுக்குள் அடித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். இந்தப் பகைமை முற்றிய நிலையில் அமெரிக்கா போன்ற நாடுகளின் குறுக்கீடு இவர்களுக்கு சுத்தமாகப் பிடிக்க வில்லை. அமெரிக்கர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதால் கிறிஸ்தவமும் இவர்களுக்கு கசந்தது. ( 90% சாத்வீகமான முஸ்லிம்கள் இதில் சேர்த்தியில்லை )

ஆக, முஸ்லிம்களுக்கிடையே உள்ள இந்த வெறுப்புணர்வு உலகிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் வேகமாகப் பரவியது. இதற்கிடையில் ஈராக்கில் சன்னி பிரிவைச் சேர்ந்த சதாம் உசேன், பெரும்பான்மையான அதாவது 70 சதவீதமுள்ள ஷியா பிரிவினரை மிகவும் கொடுமைப்படுத்தவும் கொன்று குவிக்கவும் செய்தார். அந்நேரத்தில் அமெரிக்கா தலையிட்டு சதாமை கைது செய்து தூக்கி லிட்டது. தங்கள் பிரச்சினையில் இவர்களென்ன நாட்டாமை என்று அதன்பின் வலுப்பெற்றது தீவிரவாதம்.

ஆக சதாம்உசேன் போன்றவர்களால் தங்கள் முஸ்லிம் இனத்தவரிடையே ஆரம்பிக் கப்பட்ட தீவிரவாதம் அமெரிக்கா போன்ற அயல் நாடுகளின் தலையீடு காரணமாக,

இன்னும் தீவிரமாகியது. இதற்கிடையில் உலகின் மிகப்பெரிய தீவிரவாதி பின்லேடன் அமெரிக்காவில் கொல்லப்பட்டார். பின்லேடனுடன் இருந்தவர்தாம் பாக்தாதி. இந்த பாக்தாதி பின்லேடனை விட தீவிர வாதி.

இவர்தான் இப்போது உலகெங்கும் அதிவேக மாகப் பரவி வரும் படுபயங்கரமான ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவுக்குத் தலைவர். இவர்களது முதல் குறி ஈராக்தான்!

கூடுமான வரையிலான ஈராக்கின் பகுதிகளை தன் வசப் படுத்தி அந்தப் பகுதிகளையும், சீரியாவில் தான் பிடித்த இடங்களையும் சேர்த்து இஸ்லாமிய நாடு என்றதனிநாடாகஅறிவிக்க வேண்டுமென்பதே இவர்களது திட்டம்.

ஆக இவர்களது முதல் திட்டமே சக முஸ்லிம்களோடு போரிட்டு அவர்களை தங்களது மூடத்தனமான இயக்கத்திற்கு கொண்டு வர வேண்டுமென்பதே.

இஸ்லாத்தின் மிக முக்கியகடமைசகமுஸ்லிம்களை அவனது இறப்பு வரை கூட இருந்து ஆதரவு கொடுப்பது. இந்த முக்கியக் கடமையை இந்த அமைப்பினர் மீறும்







# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் வழிகாட்டி அண்ணல் நபியாக இருக்க முடியாது...



இதுபற்றி மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா மிகுந்த வேதனை தெரிவித்துள்ளார்.

இறைவனின் படைப்புகளில் மிகச் சிறந்த படைப்பான மனிதனை உயிருடன் சொல்வது மனிதனுக்கு இறைவன் அளித்துள்ள கண்ணியத்தை சிறுமைப்படுத்துவதாகும். ஜோர்டான் நாட்டு விமானியை உயிருடன் கொளுத்தி அந்தக் காட்சியை கணொலியாகப் பரப்பியது இதே போல் பணம் கேட்டு மிரட்டி இரண்டு அப்பாவி ஜப்பானியர்களை கழுத்தறுத்துக் கொன்றது ஆகியவை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் இறை வனுக்கு எதிரான, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான மனித குலத்துக்கு எதிரான கொடுஞ்செயல்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தங்கள் நடவடிக்கைகள் மூலம் இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாட்டுக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள். இஸ்லாமிய அரசு என்று தங்களுக்குத் தாங்களே அவர்கள் பெயர் சூட்டிக் கொண்டாலும் அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளார்கள். அப்படியெனில் அவர்களது வழி காட்டிகள் யாராக இருக்க முடியும்...?

( நன்றி : ஜூனியர் விகடன் )

செயல் ஒன்றேபோதும் இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் என்று.

ஆனால் இவர்கள் தங்களை அல்லாஹ் வால் அனுப்பப்பட்டவர்கள் போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதுதான் வேதனைக் குரிய அம்சம்.

பிறரை உயிரோடு கொல்வதை அல்லாஹ்வுக்கு உகந்த காரியம் போன்று



சித்தரித்து, தொழுகைக் கடமையைச் செய்து, அல்லாஹ்வின் நாமத்திலேயே அத்தனை படுகொலைகளை நிகழ்த்துவதை உண்மையான முஸ்லிம்களால் தடுத்து நிறுத்த இயலவில்லை என்பதே வேதனைக்குரிய உண்மை.

12 ஆயிரம் கோடிக்குமேல் சொத்து கொண்ட இந்த இயக்கம், அவர்களிடம் சேருபவர் களுக்கு மாதா மாதம் கை நிறைய சம்பளத்தைக் கொடுத்து மேலும் மூளைச் சலவை செய்வதன் மூலம் தமது இயக்கத்தை வலுப்படுத்துகிறது.

இந்த ஒரு இயக்கம்தான் தீவிரவாத இயக்கம் என்பதல்ல. நூற்றுக்கணக்கான குழுக்கள் தங்களுக்குள்ளே சில கோட்பாடுகளை அமைத்து செயல்படுகிறார்கள். இவர்களது ஒரே செயல்பாடு பிறரைக் கொன்று அவர்களது இயக்கத்தை வளர்த்து அல்லாஹ்வுக்கு அதன் மூலம் பெருமை (?) சேர்க்க வேண்டுமென்பதே.

உலகிலுள்ளஷியாமுஸ்லிம்களின்பெரும் பாலானோர் இந்தியா, பாகிஸ்தான், ஈராக்







ஆகிய நாடுகளிலேயே குவிந்துள்ளனர். மற்ற நாடுகளிலுள்ள முஸ்லிம் களைப் பற்றி நமக்கு தேவையில்லை. ஆனால் இந்திய முஸ்லிம்கள், அதுவும் தமிழ்நாடு முஸ்லிம்களில், சன்னி பிரிவினர் சொற்பம் தானென்றாலும், மற்ற நாடுகளிடையேயுள்ள பகைமை இங்கு அறவே இல்லை.

திருமண நிகழ்ச்சிகள் போன்ற சுபகாரியங் களில் கூட அவர்கள் அதிக வேறுபாடு காட்டு வதில்லை. ஐந்து வேளைத் தொழுகை நடத்துதல் மற்றும் இஸ்லாத்தின் பிற கடமைகளையும், செவ்வனே நிறைவேற்று பவர்கள்தான் இவர்கள்.

நாள் முழுவதும் கடினமாக உழைப்பதால, அவர்களுக்கு தீவிரவாத குணம் என்று அறவே இல்லை.

தானுண்டு தனது வேலையுண்டு இருப்ப வர்கள். ஆனால், அவர் களுக்கெதிரான விஷயங் களை, பகிரங்கமாக எதிர்த்து ஒற்றுமையுடன் போர்க்குரல் எழுப்புவதில் வல்லவர்கள்.

சமீப காலங்களில் பாகிஸ்தானிலுள்ள பல தேவாலயங்களில் தற்கொலைப்படை தாக்குதல் மூலம்

(தொடர்ச்சி 29-ம் பக்கம் பார்க்க)

– ஒரு சிந்தனை ரிப்போர்ட்....

# எம்மதமும்..! சம்மதமா..?

எம்மதமும் சம்மதம் என்று மிகவும் சுலபமாகச் சொல்லிவிட்டு போய் விடுகிறார்கள் நல்லிணக்கம் தேடும் நம்மவர்களில் பலர்!

“தெய்வம் ஒன்று, வழிகள்தான் பல”

இதுவும் ஒரு நல்ல சொற்றொடர்தாம்!!

“அறிவு ஜீவிகள்” என்று தன்னை நினைத்துக் கொள்பவர்களுக்கு மட்டும் இது உண்மை! ஆனால் சிறிது சிந்தித்துப் பார்ப்பவர்களுக்குக்கூட புரியும் உண்மையோ வேறு.

ஒருவனை மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையே வேறுபடுத்திக் காட்டுவது அவனது பகுத்தறியும் தன்மைதான். அது போன்றே, இறைவனிடம், அதுவும் மெய்யான இறைவனிடம் மேலோங்கி இருக்க வேண்டுவது நன்மைத்தனம் ஒன்றே..

ஆனால், படுபந்தாவாக, அணுக முடியாதவராக, தோற்றத்தில் கொடூரத்தையும் உள்ளடக்கியவராக பல கடவுளர்கள் உலவிவரும் இந்த உலகில் “நல்லவர்” என்று அரைகூவல் விடும் ஒரே தேவன் இயேசு மட்டுமே.

“தெய்வகுற்றம்” “வீட்டில் நல்லது நடக்கும் பொழுது, குல தெய்வத்துக்கு பலி கொடுத்தால், பிறக்கப்போகும் குழந்தையை குலதெய்வம் கொன்றுவிடும்” என்பன போன்ற உண்மைகளை ஒத்துக்கொள்ளும் அதே நேரத்தில் “தெய்வம்” எவ்வாறு இப்படி தீங்கு செய்ய முடிகிறது..? என்று சிந்திக்க மறுப்பது ஏனோ என்று தெரியவில்லை.

“அப்பா” என்று இறைவனை அழைக்க முடியுமென்றால் அது ‘இயேசப்பா” ஒருவரை மட்டும்தான்.

“தாய் மறந்தாலும் நான் மறவேன்” என்று வாக்கு கொடுத்திருக்கிறார் அவர், அவரை தாயாக, தந்தையாக நண்பனாக யாரும் ஏற்றுக் கொள்ள முடிகிறது.

“பாவம் செய்யாதே”என்று எல்லா மதங்களும் கூறுகின்றனதான். ஆனால், அந்த பாவமில்லா பரிசுத்தம் உள்ளவர்களால்தான் இயேசுவிடம் நெருங்க முடியும். ஏனென்றால் மனசாட்சி உறுத்தும், எல்லா பழி பாவங்களையும் செய்பவர்களுங்கூட எளிதாக நெருங்க முடியும் என்றால் அப்பபடிப்பட்டவை இறைவனாக இருக்க முடியுமா..?

பரிசுத்த ஆவி பற்றி கிறிஸ்தவம் அதிகமாக வலியுறுத்துகிறது. பரிசுத்தமில்லாத துர் ஆவிகள் பற்றியும் எச்சரிக்கிறது. மிகச் சாதாரண வாழ்க்கை வாழ்வு வாழ்கின்றவர்கள் கூட சாமியாடுகிறார்கள். சாராயம், இரத்தம் போன்றவற்றைக் குடிக்கும் ஆவிகளாகத்தான் அவை காணப்படுகின்றன.

எங்காவது இயேசுவின் பரிசுத்த ஆவி இரத்தம் குடிக்கிறதா..? சாராயம் கேட்கிறதா? சொல்லுங்கள்.

இறைவனால் படைக்கப்பட்ட எந்த விதமான பொருளும் தெய்வமல்ல என்று சாடுகிறது கிறிஸ்தவம். ஆனால், கிட்டத்தட்ட

படைக்கப்பட்ட அனைத்து பொருட்களும் குறிப்பாக வானம், பூமி, கிரகங்கள், வாயு, நீர் என்று எல்லாமுமே பகவான்களாக வணங்கப் படுகின்றன. ஆடு, மாடுகளையும் விட்டு வைக்க வில்லை.

உலக முடிவு இப்படித்தானிருக்குமென்று முன்னறிவிக்கப்பட்டு எச்சரிக்கப்படுவதும், தயார் நிலையில் இருக்கவும் நாளும் அறிவுறுத் துகிறது கிறிஸ்தவம். இதுபோன்ற தொலை நோக்குப்பார்வை ஒருபோதும் வேறு சமயங்களில் கட்டாயப்படுத்தப்படவில்லை.

உலகமெங்கும் லட்சக்கணக்கான நல்லுள்ளங்களுக்கு இறைவன் இயேசு காட்சியளிக்கிறார். பரிசுத்தம், விசுவாசம் ஆகிய இரண்டையும் ஒரு சேர கொண்டவர்களை நாளும் வழி நடத்துவதை அவர்களால் உணர முடிகிறது. அது துன்பமோ, இன்பமோ அவர்கள் இறைவனால் வழி நடத்தப்பட்டு உலகம் தரக்கூடாத சமாதானம் கிடைக்கிறது.

வேறு மதங்களில் இறைவன் யாருக்கு தோன்று கிறார்..? சமாதானத்தில் வழி நடத்துகிறாரா?

இறைவனின் அளப்பரிய அன்பினால் எல்லா மனிதர் உட்பட அனைத்து ஜீவராசிகளும் இறைவனால்தால் வழி நடத்தப்படுகிறார்கள். ஆனால் பாவம் உலகில் புகுந்த ஒரே காரணத் தால்தான் இறைவனே மனிதனாக அவதரித்து பாவ விடுதலைக்காக, தன்னையே பலி கொடுக்க வேண்டியிருந்தது. இந்த உன்னத பலியின் பலன், அவரை நோக்கிப் பார்ப்பவருக்கு பிரத்தியேக பலனாகக் கிடைக்கிறது.

ஞான தாகத்தைத் தீர்க்கும் ஜீவ தண்ணீர் அவரிடம் மட்டுந்தானுள்ளது என்பது அவரை ருசித்துப் பார்ப்பவருக்கு மட்டுமே புரியும்.

உலகம் தரக்கூடாத சமாதானம் நான் தருவேன் என்று கூறுவதிலிருந்தே, சாதாரண மக்களுக்கான சமாதானத்திற்கும் அவர் தரக்கூடிய சமாதானத்திற்கும் நிரம்ப வித்தியாசம் உள்ளது என்பது தெரிகிறது.

ஒருவனுக்கு பல தகப்பன்கள் இருக்கவே முடியாது. அதுபோன்ற பல கடவுள்கள் இல்லை.!

மொத்த விளக்கமும் கூற ஆரம்பித்தால் இடம் போதாது என்பதே உண்மை. ●

---

## பாதிக்கப்படும் கிறிஸ்தவர்களும் – அப்பாவி முஸ்லிம்களும் (27–ம் பக்க தொடர்ச்சி )

ஏராளமான கிறிஸ்துவர்களைக் கொன்று குவித்தார்கள். யூவனாபாத் என்னுமிடத்தில் 2 பேரையும் பெஷாவனில் 80 பேரையும் தேவாலயத்தில் வைத்து கொன்றார்கள். 70 அசரியக் கிறிஸ்தவர்களை சிறைப்பிடித்து சிரியாவில் கொண்டு சென்று இன்னும் மறைத்து வைத்துள்ளர்கள் ஒரு தீவிரவாதக் குழுவினர். இவர்களது கதி தெரியவில்லை.

எகிப்திலிருந்து கடத்திச் சென்ற 21 கிறிஸ்தவர்களை ஈராக்குக்கு கொண்டு சென்று கொடூரமாக தலைமை சீவிக் கொன்றார் கள். ஆக, நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தீவிரவாதம் ஒழிய வேண்டு மென்றால் என்ன செய்ய வேண்டும்.

**சமாதான பிரபு இயேசு ஒருவரே தீர்வு என்பது நமது நம்பிக்கை.!**

– மு.சேவியர் சந்திரகுமார்

### தீவிரவாதம் குறித்து பைபிள் கூறுவதென்ன...?

பைபிள் என்ற வேதாகமத்தில் முன்னறிவிக் கப்படாத விஷயங்களே இல்லை எனலாம்.! கடைசிக் காலத்தில் நடக்கப்போவதைப்பற்றி முன்னறிவிப்புக்கள் ஏராளம். அவற்றில் தீவிரவாதம் பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது.

அப்போது அந்த தூதன் ஐந்தாவது முத்திரையை உடைத்தான். அப்போது, கடவுளுடைய வார்த்தையை அறிவித்து, தாங்கள் கொடுத்த சாட்சியத்திற்காக கொலையுண்டவர்களின் ஆன்மாக்களை பீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் உரத்த குரலில் பரிசுத்தரும் உண்மையுள்ளவருமான ஆண்டவரே, எவ்வளவு காலம் நீதி வழங்காமல் இருப்பீர்... எங்கள் இரத்தத்தைச் சிந்திய மண்ணுலகத்தாரை எவ்வளவு காலம் பழி வாங்காமல் இருப்பீர்." (வெளிப்பாடு 6:9–10)

இதுதவிர சங்கீதம்–83, எசக்கியேல்–38, மத்தியே–24, ஜெரேமியா–50,51 ஆகிய அதிகாரங்கள் மற்றும் வெளி, 18–ஆம் அதிகாரத்தில் 9, 11, 19 வசன ங்கள் வெளி, 17 :4 ஆகியவற்றிலும் இதுபற்றி முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

# உஷார்... உஷார்... இப்படியும் சொல்றாங்க...!

- "அரசியல் சட்டத்தில் சோசியலிஸ்ட் மதசார்பற்ற என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும். மத்திய அரசுக்கு சிவசேனா எம்.பி. கோரிக்கை" -ஆதாரம்: தி இந்து ஜனவரி 29, 2015
- "மகாத்மா காந்திக்கு தேசப்பிதா பட்டம் தேவையற்றது" வி.எச்.பி. தலைவர், சாத்வி பிரச்சி ஆர்யா, ஆதாரம்: தினமணி 11 பிப்ரவரி 2015
- "காந்தியை கொலைசெய்த நாதுராம் கோட்சே உண்மையான தேச பக்தர்" -சாஷிமகராஜ், உன்னாவ் தொகுதி, மக்களவை உறுப்பினர் ஆதாரம்: ஜனவரி 28 புதன் 2015, இந்து தமிழ் பத்திரிகை
- "கோட்ஷேவின் சிலைகளை அமைக்க, அரசு இடம் ஒதுக்க வேண்டும்" -சந்திரபிரசாத் கௌசிக், பாரதிய இந்து மஹா சபை, ஆதாரம்: தினமலர், டிசம்பர் 19, 2014
- "காந்தி சிலைக்கு காவி துண்டு அணிவிப்பு" -ஆதாரம்: தினமலர் 26-1-2015
- "ராமரை வணங்காதவர்களும், பா.ஜ.க.விற்கு வாக்களிக்காதவர்களும் முறைதவறிப் பிறந்தவர்கள்" சாத்வி ஜோதி நிரஞ்சனா, ஃபேதாபூர் தொகுதி, மத்திய அமைச்சர்
- "டிசம்பர் 25ஆம் தேதிக்குள் 1 லட்சம் முஸ்லீம்களையும், 1 லட்சம் கிறிஸ்துவர்களையும் மீண்டும் இந்துக்களாக மாற்ற செய்ய வேண்டும்"-ஆதாரம்: தரம் ஜாக்ரன்சமிதி, டிசம்பர் 12, 2014
- "முஸ்லீம்களையும், கிறிஸ்துவர்களையும், இந்து மதத்துக்கு மாற்றும் நடவடிக்கைக்கு ஆதரவு" -சதீம்கௌதம், நாடளுமன்ற உறுப்பினர், அலிகர் தொகுதி
- "சென்னையில் கர்வாசி" மதம் மாறியவர்கள் மீண்டும் இந்து மதத்திற்கு திரும்பும் நிகழ்ச்சி இந்து மக்கள் கட்சித்தலைவர் அர்ஜூன் சம்பத் கைது" (தினத்தந்தி 31-01-2015)
- "காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்துசென்றவர்கள் மீண்டும் தாய்க்கட்சிக்குத் திரும்புவதைப்போலத்தான், இந்து மதத்தில் இருந்து பிரிந்துசென்றவர்கள் மீண்டும் தாய்மதத்திற்கு வருகிறார்கள். இதைக் காங்கிரஸ் எதிர்ப்பது வினோதமாக உள்ளது". -வெங்கையா நாயுடு, ஆதாரம்: தினமலர் டிசம்பர் 25, 2014
- "முஸ்லீம்களை இந்துக்களாக மீண்டும் மதமாற்றம் செய்வதில் தவறில்லை" -சிவசேனை கட்சியின் ஆதாரப்பூர்வ பத்திரிகையான 'சாம்னா'வில் தலையங்கம், ஆதாரம்: தினமலர் டிசம்பர் 22, 2014
- "வாய்ப்பு கிடைத்தால் ஒவ்வொரு மசூதியிலும், விநாயகர் கௌரி சிலைகளை வைப்பேன்" -யோகி ஆதித்யநாத், பிப்ரவரி 10-2015, One India Tamil, Time 9.28 a.m., வாரணாசி V.H.P. நிகழ்ச்சி ஒன்றில்
- "கிறிஸ்துமஸ் தினத்தின் முக்கியத்துவத்தை மனிதவள மேம்பாட்டுத்துறை குறைக்க முயற்சி" காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு -ஆதாரம்: தினமலர் டிசம்பர் 23, 2014
- "முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மதன்மோகன் மாளவியா ஆகியோரின் பிறந்தநாளான டிசம்பர் 25ஆம் தேதியை நல்லாட்சி தினம், மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துமாறு நவோதயா பள்ளிகளுக்கு மத்திய அரசு சுற்றறிக்கை" -ஆதாரம்: தினமலர் டிசம்பர் 15, 2014
- "டில்லியில் 6 தேவாலயங்கள் மீது மர்ம நபர்கள் தாக்குதல்" -ஆதாரம்: தினமலர் 3-2-2015
- "பீகார் மாநிலத்தில் கிறிஸ்துவ வழிபாட்டு மையத்தின் மீது பஜ்ரங் தளம் அமைப்பைச் சார்ந்தவர்களால் தாக்குதல்" ஆதாரம்: தினமணி ஜனவரி 15, 2015
- "உத்திரப்பிரதேசம் மாநிலம், ஆஹ்ராவில் 100பேர் இந்துக்களாக மதமாற்றம் செய்யப்பட்டது". -ஆதாரம்: தினமலர், டிசம்பர் 10, 2014.
- "இந்திய சிறுபான்மையினரின் மூதாதையர்கள் இந்துக்களே" -V.H.P செயல்தலைவர் பிரவின் சொகாடியா, ஆதாரம்: தினமணி டிசம்பர் 17, 2014.
- "பகவத்கீதையை தேசிய நூலாக அறிவிக்கவேண்டும்"-இராமகோபாலன் ஆதாரம்:தினமலர் டிசம்பர் 9 2014
- "அனைத்துப் பள்ளிகளிலும் சனிக்கிழமை 'வசந்த பஞ்சமி' தினத்தையொட்டி 'சரஸ்வதி வந்தனம்' நிகழ்ச்சியை நடத்த வேண்டும்" என்று குஜராத் பள்ளிக் கல்வி வாரியம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஆதாரம்: தினமணி ஜனவரி 23, 2015
- "பள்ளிக்கல்வி முழுமையாக காவி மயமாக்கப்படும்" -அரியானா மாநிலக் கல்வி அமைச்சர் விலாஷ் சர்மா, ஆதாரம்: தினமணி ஜனவரி 13, 2015
- "கே.வி. பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயம்" மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி உத்தரவு. ஆதாரம்: தினமலர் நவம்பர் 15, 2014
- "இந்து மதத்தை காப்பதற்காக இந்துப் பெண்கள் 4 குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும்." பா.ஜ.க எம்.பி. சாக்ஷி மகாராத் ஆதாரம்: தினமணி ஜனவரி 7 2015

– நன்றி : தேச ஒற்றுமை இயக்கம் கைப்பிரதி

*With best compliments from*

TÜV CERT
ISO 9001 - 2000
Certificate Regn. No.
04100 2004 7057 IND.
RWTÜV

eagle
diaries

# eagle press

'DIARY HOUSE'
No. 35, M.S. Koil St., Chennai - 600 013. India.
Fax : 044 - 2595 6463
Email : Contact@eaglediaries.com
Website : www.eaglediaries.com

Telephone : 2595 2694 / 2595 2695 / 2595 2696


“என்னையா... ரொம்பதான் மகிழ்ச்சியாயிருக்கிறீர்..!”

“இல்லையே...” என்றவாறு அற்புதசாமி தானே கலந்த காப்பியை எடுத்து நீட்டினார் ராஜனிடம்.

பொதுவாக, அற்புதசாமி வாய் சும்மா இருக்காது. இரகசியம் என்றால் அவரிடம் சொன்னால் போதும், மொத்த ஊருக்கும் “வாட்ஸ்அப்” போகின்ற வேகத்தை விட அதிவேகமாக, பரவ விடுவதில் கில்லாடி.!

இரகசியம் உடைந்தது..!



## நம்பினால் நம்புங்கள்...


# கேட்டதெல்லாம் கிடைக்க வேண்டுமா..? யேசு வகுத்துக் கொடுத்த புதிய வழி...

“மகிழ்ச்சியாயிருக்கிறாயே என்று கேட்டது உண்மைதான்..” என்று பீடிகை போட்டவர் வாய், தான் கேள்விப்பட்டதை ராஜனிடம் கூற ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட, அற்புதசாமி பேசியது சாமியார் பிரசங்கம் மாதிரியே இருந்தது. பொதுவாக ராஜனுக்கு இந்த “அதிகப்பிரசங்கித் தனம்”பிடிக்கவே பிடிக்காது என்றாலும் என்னதான் முடிவு என்றறிய வாயே திறவாமல், எதிர்கேள்வி கேட்காமல் கேட்டுக்கொண்டேயிருந்தார்.

குறையேயில்லாமல்தான், ஆதியில், ஆண்டவர் உலகத்தைப் படைத்தார். சுத்தமான காற்று, சுத்தமான நீர் என்று சகலமும் சுத்தமாகவே இருந்தது. ஆனால், மனிதன்தான் சகலத்தையும் தனது சுயநலத்துக்காக மாசுபடுத்தி இன்றைக்கு இருக்கின்ற நிலைக்கு உலகத்தைக் கொண்டு வந்துவிட்டான்.

மனித மனம் அமைதியுடன் இருக்க வேண்டிதான், சமாதானத்தைக் கொண்டு வர இயேசுவையே அனுப்பினார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல, அவரைப் பின்பற்றுபவருக்கு உலகம் தராத சமாதானமும், தனது இரத்தத்தை சிந்தியதன் மூலம் பாவத்தி லிருந்து விடுதலையும் கிடைத்தது.





ஆனால் மனித புத்தியைப் பற்றி சொல்ல வேண்டுமா? குரங்கு புத்தியை விட கேவலமானது. எதையும் நம்பாது விசுவாசமில்லாமல் நடந்து, அவ்வப்போது நிம்மதியை இழந்து, அதே இறைவனை குறை கூறும் அவலமும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

இயேசுவும் சும்மா இருக்கவில்லை. பரிசுத்த ஆவியை உலகுக்கு அனுப்பினார். பரிசுத்த ஆவியின் கொடைகள் மூலம் கிட்டத் தட்ட இறைவனின் சகல குணாதியசங்களும் மனிதனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.

ஜெப தபம், உபவாசம் என்று நம்மா லெப்படி இருக்க முடியும். வாழ்நாளெல்லாம் என்று ஊறுகாய் போன்று அவ்வப்போது தொட்டுக் கொண்டால் போதாதா என்று எண்ணி நெறி பிறழ்ந்தான் அவன்.

ஏழு என்ன எழுபது தடவை கீழே விழுந்தாலும் நான் உன்னோடிருப்பேன் என்று ஏராளமான வாக்குத் தத்தங்களை பைபிள் முழுவதும் உலவ விட்டார்.

"நான் உனக்குப் போதும்" என்றார்!

"என்னை உண்பவன் இறந்தாலும் "சாகான்' என்றார்.

"பொல்லாப்பு உனக்கு நேரிடாது"

"ஆபத்தில் அவனோடிருந்து அவனை தப்புவித்து அவனைக் கனம் பண்ணுவேன்"

"இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தில் எங்கு கூடுகிறார்களோ, அங்கு நானிருப்பேன்"

"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும், நான் உங்களோடே இருப்பேன்"

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"

"கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்!"

"உன்னோடு போராடினவர்களை, தேடியும், காணாதிருப்பாய்"

"கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார்"

ஆக, வாக்குத்தத்தங்களை பற்றிப் பிடித்து ஏராளமானோர் கரையேறினர். தனது ஆவியை ஊதிதானே, ஆதியில் ஆண்டவர் மனிதனைப் படைத்தார்.! அவரால் சும்மா இருக்க முடிய வில்லை. தன்னைப்போல ஆவியைக் கொண்ட மனிதன்மேல், அவருக்கு அத்தனை அன்பு, பாசம்.

அதற்காக...

புதிய ஒரு ஈடேறும் வழியையும் சமீபத்தில் காண்பித்தார். சகோதரி மரிய பாஸ்டினா மூலம்...!

***யார் இந்த பாஸ்டினா..?***

போலந்து நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவள் அடுத்த வீட்டில்வேலைசெய்யும்சாதாரணபணிப்பெண்.


பாஸ்டினா

"நீங்கள் என்னை தேர்ந்து கொள்ள வில்லை. நான்தான் உங்களை தேர்ந்து கொண்டேன்" (யோவான் 15:16) என்றார் இயேசு பைபிளில்.



அதுபோலஇந்தபாஸ்டினாகுழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கூட இருந்து வழி நடத்தினார் இயேச. அருட் சகோதரியாகி இறைவனுக்கு பணியாற்ற பாஸ்டினாவுக்கு ஆசை! அதில் சேருவதற்குத்தான் எத்தனை தடங்கல்கள்.. எத்தனை சோதனைகள்... ஒரு வழியாக அருட்சகோதரியாகி கன்னியர் மடத்தில் சேர்ந்தால்... அங்கும் பலவிதமான பிரச்சினைகளிடையே தான் வாழ முடிந்தது.!

பாஸ்டினா உள்ளம் வெள்ளையாக இருந்ததுதான் காரணம் இயேசுவின் அன்புக்கு ! “நீ தாழ்ந்த நிலையிலிருந்ததாலேயே, என்னுடைய பேரிரக்கம் என்ற பெருங்கடலை உனக்கு வெளிப்படுத்தினேன். உன் போன்ற ஆன்மாக்கள் நான் விரும்பி தேடினாலும் அவை மிகக் குறைவே!

என்மேல் நீ கொண்ட ஆழ்ந்த விசுவா சத்தின் பொருட்டே நானும் உனக்கு கொடை களை அளிக்க முடிகிறது என்று இயேசு ஒருநாள் பாஸ்டினாவிடம் கூறினார்.

ஒன்றல்ல... பலமுறை அவளிடம் பேசினார். ஒளி மூலம், உணர்த்துதல் மூலம், கனவுகள் மூலம், காடசிகள் மூலம், மறைவான இடங்களில்இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் தோன்றி மறைவதன் மூலம், மனித மனதை அறியும் சக்தி மூலம் நடந்ததை, நடக்கப் போவதை முன்னறிவிப்பதன் மூலம்.

சக கன்னியாஸ்திரிகளிடம் சொன்னால். அங்கும் கிண்டல்... கேலி....

ஒருபுறம் அகில உலகைப் படைத்த இறைவனின் முகமுகமான நட்பு, மறுபுறம்

கடின வேலை... அவமானம், கேலி... கிண்டல்...

அந்த துன்பங்களை இயேசுவுக்காக சகித்து ஒப்புக்கொடுத்ததினால் இயேசுவுக்கு அவள்மேல் இன்னும் ஈடுபாடு. இயேசு தனது இதயத்தை திறந்து காட்டினார். அன்று சிலுவை யிலே தொங்கிய போது, யூதர்கள் அவரை ஈட்டியால் குத்தினார்களே, அப்போது அவர் விலாவிலிருந்து புறப்பட்டதே இரத்தமும் நீரும், அதனை அவளிடம் காட்டினார். இரத்த மென்பது பாவ நிவாரணத்துக்கானது ; நீரென்பது சுத்தமாக்கும் தூய்மை குணம் கொண்டது.

"எனது இரக்கம் அளவிட முடியாதது. அந்த இரக்கம் என் இதயத்திலிருந்து பீறிட்டுப் பாய்கிறதைப் பார் என்றார்".

## பாஸ்டினா புனிதரானது எப்படி..?

புனிதர் பட்டம் ஒருவருக்கு கிடைக்க வேண்டு மென்றால் முதலில் அவர் வாழ்ந்த பகுதியிலுள்ள ஆயர் தலைமையில் வழக்கறிஞர், உட்பட பல்வேறு துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட வல்லுநர்கள் கொண்ட குழு இவர் பற்றி ஆராயும். அவரது வாழ்வு முறை தொடங்கி, பரிசுத்தம், மரித்த விதம், மரித்த பின்னர் என்று பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் இவர்கள் ஆராய்ந்து விரிவான அறிக்கையை, சான்றுகளோடு தயாரிப் பார்கள். இதற்கே வருடங்கள் பல ஆகிவிடும்.!

போதுமான அளவுக்கு திருப்திகரமான பதில் கிடைத்ததும், உரிய முறையில் போப்பாண்டவருக்கு அறிக்கை அனுப்பப்படும். முதல்படி, இதோடு நிறைவுருகிறது.!

முதல்படி நிறைவுறும் தருணத்தில் "மதிப்புக்குறியவர்"என்று அழைக்கும் உரிமை மட்டும் போப்பாண்டவரால் வழங்கப்படுகிறது.

அடுத்தபடியாக விஞ்ஞானிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுகிறது. இந்த குழு தனது ஆராய்ச்சியை தொடங்கி, குறிப்பாக, புனிதராக அறிவிக்கப்படப்போகிறவர் மூலம், இயேசுவிட மிருந்து பெற்ற அதிசயங்களை துல்லியமாக அலசுகிறது. விஞ்ஞான ரீதியில் சோதிக்கிறார்கள்.

இயற்கைக்கு மேலான அற்புதந்தானா என்று குறைந்தபட்சம் இரண்டு அற்புதங்கள் நிரூபிக்கப்படுமாயின், இதனை போப்பாண்ட வருக்கு இவர்கள் பரிந்துரைக்கலாம். உடனே அவருக்கு "ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்ற பட்டம் இறை மக்களின் முன்னிலையில் போப்பாண்டவர் மூலம் விழாவெடுத்து அறிவிக்கப்படுகிறது.

ஆக, இந்த நிலையை அடையவே ஒரு சிலருக்கு 100 ஆண்டுகள் கூட ஆகிறது.

இப்போது வேறொரு கமிட்டி மூலம் வேறு அற்புதங்கள் உள்ளனவா என்று ஆராயப் படுகிறது. இந்த கமிட்டியுடன் கூடவே "பேய் வழக்கறிஞர்" குழு என்ற தனிக்குழுவும் அமைக்கப்படுகிறது.

இந்தப்பேய் வழக்கறிஞர் குழு புனிதராக ஆகப்போகிறவர் பற்றி, குற்றங் குறைகளை தேடிக்கண்டு பிடித்து, அதன்மேல் விவாதம் நடத்தி, மாபெரும் குழப்பமும் அங்கு ஏற்படும். "புனிதர்" பட்டம் கொடுக்கக்கூடாது என்ற வாதத்தை வைப்பதற்கு தீவிரமாக முயலும்.

ஆனால், இந்த தடைகளையெல்லாம் தாண்டி மீண்டும் இரண்டு அற்புதங்கள் நிரூபிக்கப்பட்டுவிட்டால் மட்டுமே இந்த குழு இவரை புனிதர் பட்டத்துக்கு தகுதியானவர் என்று பரிந்துரைக்கிறது. இதன் பின்னர்தாம் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர் இவருக்கு புனிதர் பட்டத்தை வழங்குகிறார்.

இதன் மூலம் இப்புனிதருக்காக கோயில் அமைக்கவோ, இவர் மூலம் இறைவன் இயேசுவிடம் அற்புதம் வேண்டி ஜெபிக்கவோ அனைத்து உரிமைகளும், திருச்சபையால் மனித குலத்துக்கு வழங்கப்படுகிறது.

தனது சக்திமிக்க ஜெபத்தால் இறை வனிடமிருந்து அற்புதங்களை பெற்றுத்தர உலகுக்கு ஒரு புதிய புனிதர் கிடைக்கிறார்.

சரி... தமது பாஸ்டினா புனிதராகக் காரணமான பல அற்புதங்களில் ஒரு அற்புதத்தை இங்கு அலசலாமா..?

இதுபோன்ற படத்தை வரைந்து வைத்துக் கொள்'' என்று அவளுக்குப் பணித்தார். ''மனித இனம் எனது இந்த இரக்கத்தின் இருதயத்தைப் பார்க்கட்டும், தியானிக்கட்டும், இவ்வாறு ஜெபிக்கட்டும் என்றார்.

''இயேசுவே.... என்னுடைய (பிரச்சினை) நீங்குவதற்காக, இரக்கத்தின் ஊற்றாகிய உமது திருவிலாவிலிருந்து பாயும் இரத்தத்தையும், நீரையும் நான் ஆராதித்து, முழு மனதுடன் உம்மை விசுவாசிக்கிறேன்'' என்று ஜெபிக்க வேண்டும் என்றார்.

''எனது இரக்கம் கடல் போன்றது, எனது சிலுவைப் பாடுகளை தியானிக்க தியானிக்க உன து பாவம், அது எத்தனை கொடிய தாயிருப்பினும்

மாரின் டிகன் தனது 15-வது வயது வரை மிகவும் "நார்மலா கத்தான் இருந்தார். அதன்பின்னர் அவருக்கு திடீரென்று வந்த வியாதியின் பெயர் லிம்போடிமா.

எந்தவித மருந்துகளும் இந்த வியாதிக்கு ஒரு சிறிதும் கூட கட்டுப்படாது. உடலெங்கும் உயிர் போவது போன்ற வலி, கை, கால்கள் சதைகளை இழந்து சூம்பின நிலையையடையும்.

ஒன்றல்ல... இரண்டல்ல... 10 வருடங்களில் 50 அறுவை சிகிச்சைகள். வியாதி ஒரு சிறிதும் அசைந்து கொடுக்க வில்லை. "ஒரு காலை எடுத்தால்தான் ஆயிற்று" என்றார்கள் மருத்துவர்கள்.

மாரின் டிகனின் கணவரான "பாப்" என் பவருக்கு அப்போதுதான் போலந்து தேசத்தின் "க்ராக்கோ" நகரில் அமைந்துள்ள நமது புனிதையான பாஸ்டி னாவின் கல்லறை ஞாபகத்துக்கு வந்தது.

நேராக "க்ராக்கோ" சென்றடைந்தார் பாப். பாவ சங்கீர்த்தனம் செய்தார்.

**எந்தக்கால், சதையே இல்லாது எலும்புகள் சூம்பிப்போய், வெட்டி எடுக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அந்தக் கால் சடுதியில் புது வடிவு பெற்று, பழைய நிலைக்கு மாறியதை கண் கூடாகக் காண்டார் பாப்.**

அதன்பின்னர் பாஸ்டினாவின் கல்லறைக்குச்சென்றார். கூடவேமாரின் டிகனும் கொண்டு செல்லப்பட்டார்.

ஒரே நிமிடம் பிரார்த்தனை செய் தார். "இயேசுவிடம் பரிந்துரைக்கும் உதவி தேவை" என்று முறையிட்டார்.

அடுத்த விநாடி சுய நினைவின்றி சரிந்தார் மாரின் டிகன். ஒரே நிமிடத்தில் மீண்டும் எழுந்தாள் மாரின் டிகன். பத்து வருடங்களாக பாடாய்ப் படுத்திய வலி மறைந்தே போனது.

எந்தக்கால், சதையே இல்லாது எலும்புகள் சூம்பிப்போய், வெட்டி எடுக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அந்தக் கால் சடுதியில் புது வடிவு பெற்று, பழைய நிலைக்கு மாறி யதை கண் கூடாகக் காண்டார் பாப்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஐந்து பேர் கொண்ட டாக்டர்கள் இதனை ஆராய்ந்து சான்று வழங்கவே, முதலில் வணக்குத்துக் குரிய வராகவும், பின்னர் ஆசீர்வதிக்கப் பட்டவராகவும் இறுதி யில் சுமார் 60 வருடங் கள் கழித்தே புனிதராக சமீபத்தில்தான் அங்கீகரிக்கப்பட்டார் புனித பாஸ்டினா.



அப்படியே முற்றிலு மாக மன்னிக்கப் படும்".

"நீ என்ன கேட்டாலும் அதை அப்படியே எந்தவித மறுப்புமில்லாமல் தருவேன்" என்றார் இயேசு பாஸ்டினா விடம். அதாவது, மனுக்குலத்திற்கு இதனை எடுத்துச் சொல்லவே பாஸ்டி னாவை ஒரு கருவி யாக தெரிந்தெடுத் தார் இயேசு.

"ஓ... அன்பும் இரக்கமுள்ள இறைவா.. உமது இரக்கத்தின் ஊற்றை உமது இருதயத்திலி ருந்து ஊற்றுவீராக" என்று ஜெபிக்கச் சொன்னார் இயேசு.

இவ்வாறு ஜெபித் தால் நீ கேட்டதை அப்படியே உனக் குக் கிடைக்கச் செய் வேன். ஏனென்றால் எனது இருதயம் தூய்மையானது. அன்பினால் நிறைந் தது, இரக்கத்தின் கடல், தாராள மன துடையது. அளவிட முடியாதது" என்று கூறினார்.

இயேசுவின் உயிர்த்த ஞாயிறுக்கு அடுத்து வரும் ஞாயி றன்று தொடங்கி

# இறை இரக்கத்தின் நவநாளை அனுசரிப்பது எப்படி..?



இயேசு புனித பாஸ்டினா விடம் இவ்வாறு கூறியிருந் தார். "இந்த ஒன்பது நாளிலும் நீ என்னுடைய பேரிரக்கத்தின் பொழிவிற்கு ஏதுவாக பெரிய அளவுக்கு ஆன் மாக்களை அழைத்து வர வேண்டும். வருகின்ற ஆன்மாக்களை எனது தந்தையின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வேன்."

"அவர்களுக்கு புதியதொரு இருதயத்தையும், ஆவியையும் வழங்குவேன். அவர்கள் என் மக்களாகவும், அவர்களுக்கு நான் கடவுளாகவும் இருப்பேன்"

"நான் கூறிய இரக்க முயற்சிகளை நிறைவேற்றுபவருக்கு அற்புதங்கள் தொடர்ந்து நடைபெறும். இதனை நிறைவேற்ற சடங்குகளோ, புனிதப் பயணங்களோ தேவையில்லை. இந்த அற்புதங்களைப் பெற்று பயனடைய மறுப்பவர்கள்தாம் பரிதாபத்துக்குரியவர்கள்"

சரி... இறை இரக்கத்தின் நவநாளில் எவ்வாறு ஜெபிப்பது..?

முதலாவது இறை இரக்கத்தின் ஜெபமாலையை ஜெபிக்க வேண்டும்.

இயேசுவின் மார்பிலிருந்து பாய்ந்த இரத்தமும் நீரும்தான் இருவேறு ஒளிப்பிழம்பாக இறை இரக்க பெரு ஊற்றாக பொங்கி வழிகிற தை தியானித்தலே ஜெபத்தின் ஆரம்பம்.

ஜெப மாலையின் பெரிய மணிகளை ஜெபிக்கும்பொழுது, "ஆண்டவரே... எமது பாவங்களுக்காகவும், உலகின் பாவங்களுக்காகவும் பரிகாரம் செய்யும்படியாக, இயேசுவானவரின் உடலையும், இரத்தத் தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்" என்பதாக அமைய வேண்டும். ஜெபமாலையில் சிறிய மணிகளை ஜெபிக்கும் பொழுது "இயேசுவின் துன்பகரமான பாடுகளைப் பார்த்து எங்கள் மீதும், முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்"

பத்து முறை சிறு மணிகளின் முடிவில் இவ்வாறு மூன்று முறை ஜெபிக்க வேண்டும். "பரிசுத்த தேவனே! வல்லமைமிக்க பரிசத்த தேவனே! நித்திய பரிசுத்த தேவனே! எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்"

அதன்பின் இறை இரக்கத்தின் மன்றாட்டு மாலை, பின்னர் புனித பாஸ்டினாவின் மன்றாட்டினால் வரங்களைப் பெற வேண்டி நவநாள் ஜெபம், இறுதியில் இறை இரக்க மன்றாட்டு, மறையுரை மற்றும் திருப்பலி பூசை, எண்ணெய் தேய்த்து நோய் நீங்கும் ஜெபத்துடன் நவநாள் ஜெபம் முடிவடையும்.

# கேட்டது கிடைத்தது

## – ஒரு ஆச்சரிய அனுபவம்

வடக்கன்குளத்தை சொந்த ஊராகக் கொண்டு வடவை மாதா குரலொலியை வடவை மாதாவின் மகிமைக்காக வருடந் தோறும் வெளியிடுகின்றேன் எனற்றாலும் சென்னையடுத்த கேளம்பாக்கமே எனது பங்குத்தலமாகும்.

எனது வீட்டிற்கு மிக அருகாமை யிலேயே பங்குக்கோயிலான கிறிஸ்து மீட்பர் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு கடந்த வருடம்தான் இறை இரக்கத்தின் நவநாள் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த நவநாளின் அருமை எனக்கு ஒரு சிறிதும் தெரியாது.

ஆனால், ஒவ்வொரு முதல் வெள்ளிக்கிழமையிலும், கோயில் நிரம்பி வழிந்த நிலையில் கூட்டம் கூடுவதைப் பார்த் தேன். மாதத்தின் முதல் வெள்ளியன்று நடை பெறும் இந்த இறை இரக்க ஆராதனை யின் மகத்துவம் பற்றி குருவானவர் எடுத்துரைத் ததை கேட்டேன்.

சுமார் ஆறு மணி தொடங்கி இரவு 9 மணிவரை மூன்று மணிநேரம், பக்திப் பரவசமாக ஜெபங்கள் அமைந்திருந்தன. மாதந்தோறும் இதற்காகவே வருகைதரும் அருட்திரு இயேசு அந்தோணி அடிகளார் செபத்தை திறம்பட நடத்துகிறார். அதுவும் இனிமையான ராகத்தில் இயேசுவின் பாடு களை நினைத்து மொத்த கூட்டமும் சத்தமாக ஒருசேர பாடும் பொழுது கல் போன்றிருந்த அனைவரது மனங்களும் இளகின, என்னோடு சேர்ந்து.

நம்பிக்கை பெறுகிற்று! இனம் தெரியாத சமாதானம் இறங்கியது. இறுதியில் ஜெபத்தில் வழி நடத்திய குருவானவர், ஒவ்வொருவரையும் அவர்களது முக்கிய தேவைகளைக் கூறி வேண்டுதல் செய்யுமாறு அறிவித்தார். நானும் எனது குடும்பத்திலுள்ள ஒரு விஷயம் பற்றி அதாவது எனது ஒரே மகளுக்கு, இந்த ஒன்பது நாள் ( மாதம் முடிவடையும் ) முன்பு திருமணம் கூடி வர வேண்டுமென்று ஜெபித்தேன்.

சுமார் 1000 பேர் கலந்துகொண்ட இந்த ஜெப கூடுகையின் இறுதியில் அனைவருக்கும் சிறப்பான இரவு சாப்பாடு வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒருவர் இதற்கான செலவை ஏற்றுக்கொள்கிறார்.

ஆக, நவநாளின் எட்டாவது மாதம் முடிவுவரை எனது வேண்டுதல் நிறைவேற வில்லை. என்ன ஆச்சரியம்!

9-வது நவநாள் நடைபெற்ற அந்த மாதத்தின் இறுதிக்குள் எங்களது விருப்பப் படியான ஒரு மணமகனை இறைவன் தந்து இவ்வாறாக அவர் இரக்கத்தின் நாயகன் என்று நிரூபித்தார். எனது வாழ்வின் மிகப் பெரிய மைல் கல் இந்த திருமணம் கை கூடி வந்த அந்த நிகழ்வு.

இது மட்டுமல்ல... நானே எதிர்பாராத ஒன்றும் இறை இரக்க இகபரன் எனக் களித்தார். அதுதான், நான் பிறந்த ஊரான வடக்கன் குளத்தில் நான் வருடா வருடம் வடவை மாதா குரலொலி வெளியிடுவதன் மூலம் சிறப்பு செய்து வரும் வடக்கன்குளம் மாதாவின் தேவால யத்திலேயே நடைபெற அருள் புரிந்தார்.



இந்த வருட செப்டம்பர் மாதம் 17-ந் தேதி வடக்கன் குளத்தில் இந்த திருமணம் நடைபெறு கிறது !

இயேசுவுக்கே புகழ்!

- மு. சேவியர் சந்திரகுமார்

*ஒன்பது மாதங்கள் அல்லது வாரங்கள் என்று தவறாது இந்த தியானத்தைச் செய்யுமாறு இயேசு பாஸ்டினா மூலம் உலகுக்கு தெரிவித்தார்.*



# இறை இரக்கத்தால் எழுச்சியடையும் கேளம்பாக்கம் பங்கு

**கே**ளம்பாக்கம் பங்கின் தலைமை ஆலயம் கேளம்பாக்கத்தில் அமைந்துள்ள கிறிஸ்து மீட்பர் ஆலயம். இங்குதான் இந்த இறை இரக்க ஆராதனை கடந்த வருடம் புதிய பங்குத் தந்தையாகிய அருட்திரு. **ஸ்டீபன்** M.S.F.S. அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சில நூறு பேரே கலந்து கொண்ட இந்த நவநாளில் இப்பொழுது சுமார் ஆயிரம் பேர் கலந்து கொள்கின்றனர். கோவிலில் ஒரேயொரு பலி பூசை என்ற நிலைமை மாறி ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று பூசைகளிலும் மக்களால் ஆலயம் நிரம்பி வழிகிறது.

விசேஷ நாட்களில் கோயில் மைதானத்தில் உள்ளும் புறமும் பல திசைகளிலுமாக சுமார் 75 கார்கள் நின்று கொண்டிருக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சி. இது மட்டுமல்ல, பல கோடி பெருமான, மிகப் பிரமாண்டமான முறையில் 130 அடி உயர கோபுரத்துடன் கூடிய இறை இரக்கத்தின் ஆலயமொன்றை நிறுவவும் ஏற்பாடுகள் கடந்த ஓராண்டாகவே நடைபெறுகிறது. ( படம் : 3-ம் அட்டை) பங்கு மக்களின் முழு ஒத்துழைப்புடன் சமீபத்தில் ஆயரால் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பித்து விட்டன.

மேற்கண்ட அனைத்தையும் செய்வதற்கான மன உறுதி, உழைக்கும் திறன் ஆகியவற்றை அருட்திரு. **ஸ்டீபன்** M.S.F.S. அடிகளாருக்கு வழங்கியது நிச்சயமாக அந்த இறை இரக்கத்தின் ஆண்டவர்தாம்.

அவருக்கு உறுதுணையாக, துரும்பாக ஏராளமான பலர் இருக்க நானும், கட்டிடக் கமிட்டி செயலாளர் என்ற துரும்பாக செயல்பட அருள்புரிந்த இறைவனுக்கு கோடா கோடி நன்றி.!

**- மு. சேவியர் சந்திரகுமார்**

*ஆக, இந்த பக்தியை உலகம் முழுவதும் கடைபிடித்து, எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ வழியை வகுத்துக் கொடுத் தார் இயேசு என்று முடித்தார் அற்புதசாமி. வாயில் வண்டு நுழையாத குறை.!*

***"ஆ"வென்று பிழந்திருந்த ராஜனின் வாயை அற்புதசாமியின் கைகளால்தான் மூட முடிந்தது.●***

Owned and Published by **M. Xavier Chandrakumar** from 1/448, Pillaiyar Koil Street, Kelambakkam, Kanchipuram Dist., - 603 103. and Printed by **Syed Azamadullah,** at **Sharp Printers,** 324, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor. **M. Xavier Chandrakumar**